*பார்வைக்கு...*


| | |
|---|---|
| சஞ்சிகை | : இளவேனில்~11 |
| வெளியீடு | : 15 ஜனவரி 2017 |
| வெளியிடுவோர் | : கேசி தமிழ் மன்றம் |
| வடிவமைப்பு | : க.பார்த்தீபன் |
| அட்டைப்படம் | : சுகன்யா ராஜ் |
| தொடர்புகட்கு | : கேசி தமிழ் மன்றம்<br>PO Box 2516,<br>Fountain Gate, VIC 3805<br>Australia |


# பொருளடக்கம்


- வணக்கம் — 2
- தலைவர் உள்ளத்திலிருந்து — 3
- தை மகளே நீ வருக! தரணி அது தான் மகிழ!! — 4
- விநாயக கடவுள் — 5
- முயல் — 7
- சதுரங்கம்.. — 9
- என்னுடன் மரணம் கூடவேதான் பயணிக்கிறது... — 10
- அந்த நாள்.. — 12
- சூரிய குடும்பம் - சித்திரம் — 13
- மிருதங்கம் — 14
- பாரதி விளையாட்டுப் போட்டி... — 15
- ஆர்கிமிடீஸ்(*Archimedes*) மறைக்கப்பட்ட கதை.. — 16
- தமிழர் திருநாள் - சித்திரம் — 18
- தமிழ்! — 19
- நாமும் எமது சுழலும்.. — 20
- பாம்பு! — 21
- அறிவுள்ள நாய்க்குட்டி.. — 22
- கிரிக்கெட் விளையாட்டு — 23
- எங்கள் வீட்டுப் பிள்ளை.. — 24
- கல்விச் செல்வம்.. — 25
- எனது குடும்பம் - சித்திரம் — 26
- எத்திசை நோக்கிச் செல்லப்போகின்றோம்... — 27
- தொலைத்தொடர்பு சாதனங்களும் நாமும்.. — 30
- *2004*ல் இருந்து *2016* வரை... — 31
- அப்பம்மா - சித்திரம் — 35
- எதிர்காலத்தில்.... — 36
- மிட்சேல் ஸ்டார்க் — 36
- முகப் புத்தகம் (*Facebook*) — 37
- கூடைப்பந்து... — 37
- தெரிந்து கொள்ளலாம் வாங்க... — 38
- கேசி தமிழ் மன்றத்தின் மூத்தோர்கள் ஒன்றுகூடல்... — 39
- தமிழ் ஊக்குவிப்பு போட்டி... — 41
- மயில் - சித்திரம் — 42
- நட்பு என்ற நிழலில்... — 43
- அன்னை என்னும் ஆலயம்.. — 48
- ஆறு — 54

# இளவேனில்

## ஆசிரியரின் உள்ளத்திலிருந்து

தமிழ் புலவன் பாரதியார் காலம் தொட்டு தாய்த் தமிழ் அழிந்து போகும் என்ற பெரும் ஏக்க எதிரொலி காலம் காலமாக ஒலித்துக் கொண்டு தான் இருக்கிறது. இது ஒவ்வொரு தமிழன் மனதிலும் ஆழமாக இழையோடி இருந்தாலும் தமிழை வளர்க்க எதிர் கொள்ளும் முறைகளை இலகுவாக்கி எமது இளைய தலை முறைக்குப் பதிய வைக்க ஒவ்வொரு நாட்டிலும் தமிழர்கள் பல முயற்சிகளை செய்து கொண்டிருக்கிறார்கள்.

அந்த வகையில் அவுஸ்ரேலியாவிலும் மிகத் திறமையாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். பாராட்டவேண்டும். நாம் வசிக்கும் விக்ரோறிய மாநிலத்தில் கேசி தமிழ் மன்றமும் ராமர் பாலம் கட்ட உதவிய அணிலின் அளவில் தமது நேரங்களையும் காலங்களையும் அர்ப்பணிக்கின்றார்கள்.

தமிழ் எழுத்துத் திறமையுள்ள பிள்ளைகள் ஆக்கத்திறமை உள்ளவர்களாகக் கொண்டு வரவேண்டும் என்ற ஆவலுடன் உழைக்கின்றோம். அவர்களுக்காக இளவேனில் களம் அமைத்துக் கொடுக்கின்றது.

இதில் மாணவர்கள், பெற்றோர்கள் தொழில் சார்ந்தவர்கள் தங்களின் அனுபவங்களை எழுத வேண்டும் என்ற எமது ஆலோசனையை தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

இளவேனிலுக்கு ஆதரவு தருவோர், எழுதுவோர் மிகச் சிறிய வட்டத்திற்குள் நிற்கிறது. இந்த நிலை மாறவேண்டும். மாற்றத்துக்கு நாமும் உழைப்போம். தமிழால் உயர்வோம். அரை ஆண்டுக்கு ஒன்று என்று வெளிவரும் சஞ்சிகையை காலாண்டுக்கு ஒன்று என்று வெளியீடும் நிலைக்கு கொண்டு வரவேண்டியது இளவேனில் சஞ்சிகையை வாசிக்கும் வாசகர்களாகிய உங்களிடம் விட்டு விடுகிறோம், இந்த தார்மீகப் பொறுப்பு இலகுவானதல்ல! இந்தச் சுமையை ஒவ்வொருவரும் சுமப்போமானால் இளவேனில் சஞ்சிகை சிறப்பான வெளியீடாக வெளிவரும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் கிடையாது. ”தமிழ் எங்கள் மொழி! உரக்கச் சொல்வோம். தமிழ் எங்கள் அடையாளம்! நிலைக்கச் செய்வோம்”

**நன்றி!**

**ஆசிரியர் குழு**

# தலைவரின் உள்ளத்திலிருந்து ……

திரும்பிப் பார்க்கிறேன்! சங்ககாலக் காதல் தலைவி தன் தோழியிடம் சொல்லிக்கொண்டிருக்கிறாள் "கார் வந்தால் மன்னன் தேர் வரும் என்று காத்திருந்தேன். கார் வந்தது, மன்னன் தேர் வரவில்லை, கண்ணில் நீர் வந்தது".

சற்று முன்னோக்கிப் பார்க்கிறேன்! ஜப்பானில் பறக்கும் மின்மினிப் பூச்சியை அமெரிக்க விஞ்ஞானி தொலைநோக்கி மூலம் ஆராய்ந்து கொண்டிருக்கிறான்.

கால மாற்றத்தின் வியத்தகு விஞ்ஞான வளர்ச்சி. உள்ளங்கையில் உலகை வைத்துக் கொண்டு வாழ்க்கை பரபரத்துக் கொண்டிருக்கிறது. இன்னொரு புறத்தில் ஆக்க சக்திக்காக பயன்படுத்தப்பட வேண்டிய விஞ்ஞானம் அழிவுப் பாதையில் உலகை அழைத்துச் சென்று கொண்டிருக்கிறது. மனிதம், மானிடம் என்ற பதங்களை அகராதியில் மட்டுமே தேட வேண்டியிருக்கிறது.

இத்தகைய நிலையில் பல்லினக்கலாசாரம் வாழுகின்ற நாடுகளில் இனங்களுக்கிடையேயான புரிந்துணர்வு, நல்லிணக்கம், மற்றைய இனங்களின் கலாசார விழுமியங்களை மதித்தல், மதிப்பளித்தல்என்பவற்றிற்கான தேவைகள் பெருகுகின்றன.

இவற்றைக் கருத்தில் கொண்டு 2010ம் ஆண்டில் உதயமாகி இன்று தன்னுடைய ஏழாவது அகவையில் காலடி எடுத்து வைத்திருக்கும் கேசி தமிழ் மன்றம் பல்லினக்கலாசாரத்தின் ஒரு அங்கமாக தன்னுடைய பணிகளை செவ்வனே செய்து வருவதோடு எமது மொழியின் அடையாளத்தையும் உயர் பண்பாட்டு விழுமியங்களையும் இளைய சமுதாயத்திற்கு எடுத்துச் செல்வதிலும் முன்னிலைவகிக்கிறது.

சிறுவர்களுக்கான நிகழ்வுகள், பயிற்சி பட்டறைகள், மூத்த குடிமக்களுக்கான ஒன்றுகூடல்கள், இளையவர்களையும், படைப்பாளிகளையும் எழுதத் தூண்டும் நோக்கில் வெளியிடப்படும் இளவேனில் சஞ்சிகை, தைப்பொங்கல் மற்றும் ஆடிப்பிறப்பு விழாக்கொண்டாட்டங்கள் என்று பயன் தரும் பல நிகழ்வுகளில் கேசி தமிழ் மன்றம் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறது.

சில நூறு அன்பர்களுடன் தன்னுடைய முதலாவது தைப்பொங்கல் நிகழ்வைக் கொண்டாடிய கேசி தமிழ் மன்றம் இன்று சில ஆயிரம் மக்களைத் தன்னகத்தே அணைத்துக் கொண்டுள்ளது என்பதே மன்றம் வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது என்பதற்கு தக்க சான்றாக அமைகிறது.

இத்தகைய உயர் பணியில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் மதிப்பிற்குரிய மன்றத்தின் உறுப்பினர்களுக்கும், தோளோடு தோள் நின்று எம்மை ஊக்குவித்துக் கொண்டிருக்கும் நல்ல உள்ளங்களுக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு இளவேனில் சஞ்சிகையின் வளர்ச்சிக்கும் உங்களாலான பங்களிப்பை நல்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

எல்லோருக்கும் எனது மனங்கனிந்த தைத்திருநாள் வாழ்த்துக்கள்.
அன்பு வணக்கங்களுடன்,

**க. மணிவண்ணன்**
**தலைவர்**
**கேசி தமிழ் மன்றம்**

## தை மகளே நீ வருக! தரணி அது தான் மகிழ!!

-தர்மதா-

*தை மகளே நீ வருக! தரணி அது தான் மகிழ!!*

*கை நிறையப் பை நிறைய, மெய் நிறைய, மேன்மையுற*

*தை மகளே நீ வருக! தரணி அது தான் மகிழ!!*

*நீ பிறந்த பூமியிலே தீ அழிந்த நாள் கடந்து*

*"சீ" வாழ்க்கை ஏன் என்று சினந்திருக்கும் குடிகளுக்கு*

*வாழ்வொன்று நீ தருக! வா மகளே நீ வருக!!*

*விளை நிலம் தான் பார்த்து விழி உருகும் இனம் அதற்கு*

*தளை அறுத்து வழி சமைத்து நிலம் தழைக்க மனம் செழிக்க*

*வாழ்வொன்று நீ தருக! வா மகளே நீ வருக!!*

*ஆண்டாண்டு தோறும் அழைப்பு வரும் உனக்கு*

*நீண்ட யுகமான இருள் வாழ்வை ஒழிப்பதற்கு!*

*மீண்டும் வா மகளே! மேன்மையுறும் ஒளி தரவே!!*

*காலைப் பனி சிரிக்க, காரிருள்தான் மறைய*

*கீழ் வானம் தான் சிவக்க, மண் வாசம் தான் மணக்க*

*தை மகளே நீ வருக! தரணியிலே ஒளி பரவ!!*

*மாக்கோலம் தான் போட்டு மாவிலையும் தோரணமும்*

*பூக்கோலம் சேர்த்துன்னைப் பூசிக்கும் தமிழனுக்கு*

*விடிவொன்று நீ தருக! விரைந்திங்கு நீ வருக!!*

# விநாயக கடவுள்

- திருமதி. உமா விஜய்-

நாம் எந்த ஒரு காரியத்தைச் செய்த் தொடங்கும் போதும் முழுமுதற் கடவுளான விநாயகரை வணங்குவது தொன்மைக்காலம் முதல் இன்று வரை வழக்கத்தில் உள்ள செயலாகும்.

விநாயகர், கணபதி, விக்னேஸ்வரர், பிள்ளையார், கணேசன் என்று பல பெயர்களால் அழைக்கப்படும் யானைமுகத்தானைப் பற்றி இக்கட்டுரையில் காணலாம்.

விநாயகர் என்றால் அவருக்கு மேம்பட்ட தலைவர் இல்லை என்றும், விக்னேஸ்வரர் என்பது விக்னங்களைப் போக்குபவர் என்றும், கணங்களுக்கு அதிபதி என்பதால் கணபதி என்றும் கூறுவர்.

இதிகாச புராணங்களில் ஆதியில் பிள்ளையார் மனித உருவில் பாலகனாய் இருந்தார் என்று அறிவோம். இக்கட்டுரையில் அதன் விபரங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

முன்னொரு சமயம் பார்வதிதேவி தன் உடம்பிலிருந்து எடுத்த மண்ணினால் ஒரு சிறுவனை உருவாக்கினார். தன் அந்தப்புரத்திற்குள் யாரையும் அனுமதிக்க வேண்டாமென்று கட்டளையிட்டு அச்சிறுவனைக் காவலுக்கு அமர்த்தினாள். அப்பொழுது அங்கு வந்த சிவபெருமானை தடுத்து நிறுத்தியதைக் கண்ட சிவகணங்கள் கோபம் கொண்டு அச்சிறுவனுடன் போர் புரிந்தனர். இப்போரில் சிறுவனின் தலை துண்டிக்கப்பட்டது. இதையறிந்த பார்வதி தேவி தன் பிள்ளைக்கு உயிர்தர வேண்டினாள். சிவபெருமான் தன் கணங்களிடம் யார் வடக்குப் பக்கம் தலை வைத்துப் படுத்திருக்கிறாரோ அவரது தலையை வெட்டி கொண்டுவருமாறு பணித்தார். கணங்கள் வடக்கே தலை வைத்துப் படுத்திருந்த ஒரு யானையின் தலையை வெட்டிக் கொண்டு வந்தனர். அத்தலையை அச்சிறுவனுக்கு வைத்து உயிர் தந்தார். அதனாலேயே அவருக்கு கஜாணனன்/கஜமுகன் என்ற பெயர் பெற்றார்.

மனித முகத்துடன் இருந்த பால விநாயகரை தரிசிக்க ஆசை உள்ளதா? இக்கட்டுரையின் மூலம் உடனடியாக அத்தலத்திற்குச் செல்ல முடியாதவர்களுக்கும் எனக்குத் தெரிந்த விபரங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

சோழநாட்டின் காவேரிகரையின் தெற்குப் பக்கத்தில், மாயவரம்–திருவாரூர் மார்க்கத்தில் பூந்தோட்டத்திலிருந்து இரண்டு கி.மீட்டர் தூரத்தில் உள்ள தலம் திலதர்ப்பணபுரி. திருஞானசம்பந்தர் தனது பாடலில் ''திருத்தலதைப்பதி'' என்று குறிப்பிட்டுள்ளார். இன்று மக்களால் ''செதலபதி'' என்று அழைக்கப்படும் இத்தலத்தில் ''ஆதிவிநாயகர்'' என்ற

திருநாமத்தோடு, மனித முகத்துடன் அதாவது நரமுக கோலத்தில் நான்கு கரங்களுடன் கோவிலுக்கு வெளியில் சிவபெருமானை நோக்கி அர்த்த மண்டபம், மஹா மண்டபம் விமானத்துடன் தலகர்ப்பத்தில் மேற்கு நோக்கி அமர்ந்து அருள் புரிகிறார்.

மேலும் இத்தலத்தில் நமது முன்னோர்கள் பித்ரு/பிதுர் கடன்களை நீக்கலாம். நீத்தார் கடன் தீர்க்கப்படாவிட்டால், முன்னோர் சாபத்தால் வாழ்வில் பல இடையூறுகள், திருமண தடைகள், மனநிம்மதியின்மை, புத்ரபாக்கியமின்மை போன்றவை ஏற்படக் காரணமாகும்.

இத்தலத்தில் பித்ரு தர்ப்பணம்/திதி செய்வது பித்ரு சாபத்தை நீக்கும். இதை ஊர்ஜிதப்படுத்தும் விதமாக இத்தலத்தில் புராணத்தில் உள்ளதை தெரியப்படுத்துகிறது.

இராமாயண காலத்தில் ஸ்ரீராமபிரான் தன் தந்தைக்கு வைத்த பிண்டங்களில் (சோற்று உருண்டை) புழுக்கள் வெளிவந்தது. ராமர், லஷ்மணர் இத்தலத்து முக்தீஸ்வரர் உடனுறை ஸ்ரீசுவர்ணவல்லியை வணங்கி திதி கொடுத்ததாகவும், அவர் பித்ரு கர்மாக்களை செய்து வணங்கிய நான்கு சிவலிங்கங்களையும் இவ்வாலயத்தின் பின் புறத்தில் தரிசிக்கலாம்.

இந்த பழமையான திருத்தலத்தின் பிரகாரத்தில் நர்த்தன விநாயகர்,



தட்சிணாமூர்த்தி, விக்ஞானப கணபதி, பிதுர் லிங்கங்கள், சுப்ரமணியர், காசி விஸ்வநாதர், மஹாவிஷ்ணு, மஹாலஷ்மி, ப்ரம்மா, துர்க்கை, சண்டிகேஸ்வரர், மந்தாரவனேஸ்வரர், சூரியர், சந்திரர், பைரவர், ஸ்ரீதேவி, பூதேவி, பெருமாள், நால்வர், நவக்கிரகம், நந்தி, பலிபீடம் என்று பரிவார தெய்வங்களையும் தரிசிக்கலாம்.

வேத பாடசாலை சிறப்பாக நடப்பது கூடுதல் சிறப்பாகும். ஒரு நாள் அன்னதானத்திற்கு இந்திய ரூபாய் 3500/- கட்டினால் வேதம் படிக்கும் சிறார்களுக்கு மதிய போஜனம் செய்விக்கலாம். இத்தலத்தின் அருகே சரஸ்வதி கோவில் உள்ளது. இவ்விரு தலங்களையும் ஒரே நாளில் தரிசனம் செய்யலாம்.

# முயல்!

-கிரிசிகன் சீவராஜா-

ஒரு ஊரில், ஜனகன் என்று ஒரு சிறுவன் இருந்தான். அவன் ஒன்றுமே செய்யாமல் எப்போதும் சோம்பேறியாக இருப்பான். பெற்றோர் சொல்வதைக் கேட்காமல் விளையாடுவதிலேயோ, படிப்பதிலேயோ, வேறு எதிலும் ஊக்கம் காட்டாமல் சோம்பேறியாக இருப்பதைப் பார்த்து அவனுடைய பெற்றோர் கவலைப்பட்டார்கள்.

சில நாட்கள் கடந்து போனது, பள்ளிக்கூடம் ஆரம்பித்தது. அவன் பாடசாலை சென்ற முதல் நாள் அவனுடைய ஆசிரியர், " அடுத்த சில வாரங்களில் ஒரு விளையாட்டுப்போட்டி நடைபெறும். அந்த போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு பரிசுகள் கிடைக்கும்." என்று அறிவித்தார். ஜனகனுக்கு பரிசுகள் மிகவும் பிடிக்கும். ஆனால், அவன் எதிலுமே முயற்சி செய்யமாட்டான். ஆனால், ஆசிரியரின் இந்த அறிவித்தலைக் கேட்டதும், தான் எப்படியும் பரிசை வென்றெடுக்க வேண்டும் என்ற ஆசையில் ஒரு முடிவுக்கு வந்தான்...

அன்று பாடசாலை முடிந்ததும், அவனின் பெற்றோர்களின் வண்டியில் போகாமல், வீட்டுக்கு மெதுவாக ஓடி தனது முயற்சியை ஆரம்பித்தான். தொடர்ந்தும் பல நாட்கள் இப்படி செய்து வந்தான். இதை அவனின் பெற்றோர் பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். நாட்கள் கடந்து சென்றன. ஜனகன் முயற்சி எடுத்து நன்றாக பயற்சி செய்தான்.


கடைசியாக விளையாட்டு போட்டி வந்தது. அன்று, முதலாவதாக அவர்கள் கொடியேற்ற நிகழ்வு செய்தார்கள். அதற்கு பிறகு, போட்டிகள் ஆரம்பித்தன. "முதலாவது போட்டி, ஓட்டபோட்டி!" என்று அமைப்பாளர் அறிவித்தார். எல்லோரும் அவர்களின் இடத்திற்கு போனார்கள். போட்டி ஆரம்பித்தது. போட்டியாளர்கள் எல்லோரும் உடனே வேகமாக ஓடினார்கள். ஆனால் ஜனகனோ கடைசியாக வந்து போட்டியில் வெற்றி பெறவில்லை. இதனால், ஜனகனுக்கு சரியான சோகமாக இருந்தது . ஆனால் அவன் மனம் தளரவில்லை. அவன் அடுத்த போட்டிக்கு ஆயத்தம் ஆனான்.

"அடுத்த போட்டி, தடகளப் போட்டி!" என்று அமைப்பாளர் அறிவித்தார். அந்த போட்டியில் ஜனகன் ஒரு பாரமான தட்டு எறிய வேண்டும். ஆனால், அவர் நன்றாக எறியவில்லை. அதற்காக, முன்றாம் இடம் வந்தான். ஆனால், முதலாவதாக வருபவர்க்கு மட்டும்தான் பரிசு கிடைக்கும். இதைப் போல், ஒவ்வொரு போட்டியாக கலந்துகொண்டும் முதல் பரிசு கிடைக்கவில்லை. ஜனகன் மிகவும் சங்கடப்பட்டு இருந்தான். எல்லோரும்

அவனை பார்த்து கேலிசெய்து, சிரித்து இருந்தார்கள். அன்றைய போட்டி முடிவடைந்தது. அதை பார்த்த ஜனகனின் பெற்றோர்களுக்கு அவனின் மேல் அனுதாபம் வந்தது.

மறுநாள் போட்டிகள் தொடர்ந்தன. ஜனகனுக்கு போட்டியில் வெல்லவேண்டும் என்ற ஆர்வம் கூடியது. அதற்காக ஜனகன் முதல் நாள் இரவு முழுக்க பயிற்சி செய்தான். இன்னும் பல போட்டிகள் இருக்கின்றன. இவற்றில் வெற்றி பெற்றால் தனது பெற்றோர் சந்தோசப்படுவார்கள் என்று அவனது மனம் எண்ணியது. இப்பொழுது, நீளம் பாய்தல் போட்டி. அதில், ஜனகன் நன்றாக மிக கடுமையாக விளையாடி, முதலாவது பரிசு வென்றெடுத்தான். ஜனகனின் பெற்றோர்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

அடுத்த போட்டி, குண்டெறிதல் போட்டி. ஜனகனுக்கு பயமாக இருந்தது. ஆனால், அவனோ மனதை தளரவிடாமல், வியக்கத்தக்க அளவில் அந்த போட்டியிலும் வெற்றி அடைந்தான். "கடைசியாக... நீங்கள் காத்துக்கொண்டிருந்த போட்டி... தடைதாண்டி ஓடும் போட்டி" என்று அழைப்பாளர் அறிவித்தார். ஜனகனின் இதயம் மிக வேகமாக அடித்தது. இந்த போட்டி அவன் வெற்றி அடைந்தால், அவன் 'சாம்பியன்' ஆக வருவான் என அவனுடைய பெற்றோர் நினைத்தார்கள்.




போட்டி ஆரம்பித்தது. எல்லோரும் வேகமாக தடைதாண்டி ஓடினார்கள். ஜனகன் வேகமாக ஓடியபோது, இடையில் தடுக்கி விழுந்தான். ஆனால் அவனின் எண்ணம், " விடா முயற்சி, விடா முயற்சி" என்று சொன்னது. ஜனகன் உடனே எழும்பி மிகவேகமாக ஓடி, எல்லோரையும் கடந்து போய் முதலாவதாக வெற்றி அடைந்தான். ஜனகனுக்கு மகிழ்ச்சியோ மகிழ்ச்சி. அவனின் பெற்றோர்களுக்கு மகிழ்ச்சி மிகுதியால் ஓடி வந்து கட்டி அணைத்து ஆனந்த கண்ணீர் விட்டார்கள்.

போட்டிகள் முடிவுக்கு வந்தன.அறிவிப்பாளர், "எமது இரண்டாயிரத்து பதினேழாம் ஆண்டு 'சாம்பியன்' ... ஜனகன்!" என்று அறிவித்தார். அவனது இடையறாத விடா முயற்சியினால், பல போட்டிகளில் அவன் வெற்றி பெற்றதையிட்டு எல்லோரும் அவனை வாழ்த்தினார்கள். ஜனகன் மேடைக்கு சென்று, தனது பரிசினை வாங்கினான். பல ஆண்டுகள் கடந்து போக, தொடர்ந்து விடா முயற்சி செய்து, ஜனகன் மிக திறமைமிக்க விளையாட்டு வீரன் ஆகினான். "விடா முயற்சி வெற்றி தரும்".

# சதுரங்கம்..

-அக்ஷயன் மணிவண்ணன்-

நாங்கள் இன்று *chess* என்ற விளையாட்டை நண்பர்களுடன் ஆசையாக விளையாடுகின்றோம். ஆனால் *chess*சை யார் உருவாக்கியது என்று உங்களுக்கு தெரியுமா? இதுக்கு பல விடைகள் இருக்கின்றது. சில வரலாற்றாசிரியர்கள் *Chinese* மாலுமிகள்தான் கண்டுபிடித்தவர்கள் என்று கூறுகிறார்கள். மற்றவர்கள் ஒரு *Persian* அரசர்தான் கண்டுபிடித்தவர் என்று சொல்கிறார்கள்.



எனினும், ஒரு கதை இருக்கின்றது. ஒரு இந்திய அரசர் பொதுவான விளையாட்டுகள் கூடுதலாக விளையாடி களைத்துப்போய்விட்டார். அவர் ஒரு ஏழை கணித அறிவாளியைக் கூப்பிட்டுச் சொன்னார், "நீங்கள் ஒரு நல்ல விளையாட்டை உருவாக்கினால், நீங்கள் எதை கேட்டாலும் தருவேன்". அந்த கணிதன் மிக்க மகிழ்சி அடைந்தார். அவர் இரவும் பகலும் கடினமாக யோசித்து சதுரங்கம், என்ற விளையாட்டை உருவாக்கினார். சதுரங்கம் விளையாட்டு அரசர்க்கு நன்றாக பிடித்துவிட்டது. அவர் கணிதனிடம் கேட்டார், "இந்த சிறந்த விளையாட்டை உருவாக்க நீங்கள் பல கஷ்டங்களை தாண்டி, எனது ஆசையை நிறைவேற்றி இருக்கின்றீர்கள். உங்களுக்கு என்ன வேண்டும் என்று சொல்லுங்கள்."

அந்த கணிதன் சதுரங்கம் விளையாடுகின்ற பலகையைக் காட்டிச் சொன்னார், "அரசரே! இந்த பலகையில் 64 சதுரங்கள் இருக்கின்றது. முதலாவது சதுரத்திற்கு 1 அரிசி மணி. இரண்டாவது சதுரத்திற்கு 2 அரிசி மணிகள். மூன்றாவது சதுரத்திற்கு 4 அரிசி மணிகள், இவ்வாறாக அறுபத்திநான்காவது சதுரத்திற்கு அறுபத்திமூன்றாம் சதுரத்திற்கு கொடுத்த அரிசி மணிகளின் எண்ணிக்கையை இரண்டால் பெருக்கி எனக்கு தருவீர்களா என்று பணிவாக கேட்டார். "இவ்வளவு தானா? மின்னும் தங்கம் அல்லது விலை மதிப்பான வெள்ளி கேட்டிருக்கலாமே" என்று அரசர் ஆச்சரியப்பட்டார். இதற்கு கனிதன் "இல்லை அரசே, எனக்கு அரிசி மணிகளே போதும்," என்று சொன்னார். அரசர் சிரித்துவிட்டு சென்றார். ஆனால் சிறிது நேரத்தில், அரசருக்கு தெரிந்தது

கணிதன் அவருக்கு ஒரு மிகவும் கடினமான ஒரு வேண்டுகோளை வைத்துள்ளார். அரசர் அவரின் சொத்து எல்லாவற்றையும் விற்றாலும் அவரால் கணிதனுக்கு முப்பத்தோராவது சதுரத்திற்கு தேவையான அரிசி மணிகளை கொடுக்கமுடியாது! அரசர் கணிதனிடம் சொன்னார், "நீங்கள் கேட்டதை என்னால் செய்ய முடியவில்லை. இன்றிலிருந்து நீங்கள் தான் எனது கணித ஆலோசகர்".

அரசரின் கணித ஆலோசகர் வெவ்வேறு நாடுகளுக்கு பயணம் செய்து சதுரங்கத்தை கற்றுக்கொடுத்தார். சிறு காலத்திற்கு பிறகு, சதுரங்கம் பொது விளையாட்டாக மாறியது. பழங்காலத்தில் கண்டுபிடித்த விளையாட்டுதான் இன்று எங்களுக்கு ஒரு பொழுதுபோக்காக இருக்கிறது.

*Note:* கணிதன் கேட்ட அரிசி மணிகளின் எண்ணிக்கை *18 446 744 073 709 551 615* ஆகும்.

## என்னுடன் மரணம் கூடவேதான் பயணிக்கிறது...

**-சுகி வித்யா-**

*என்னுடன் மரணம் கூடவேதான் பயணிக்கின்றது*

*எந்த நொடி என்னை மரணம் கைப்பிடிக்கும்*

*என்றுதான் இன்று தெரியாது*

*"இன்று" என்று சொன்னதற்கு காரணமுண்டு*

*ஒருவேளை நாளை எப்போது மரணம் வரும் எனத் தெரியவரவும் வாய்ப்பிருக்கிறது*

*இப்போது என் உடலை இதயமெனும் கருவி இயக்குகிறது*

*இதயமெனும் கருவி செயலிழக்கையில் மரணம் என் உடலை வாங்கிக் கொள்ளும்*

*மரணம் என் உடலை வாங்கியதும்*

*என் உடல் அசைவற்றுக் கிடக்கும்*

*என்னால் சிந்திக்க முடியாது*

*அன்பு கொள்ள முடியாது*

*இந்த உலகை இரசிக்க முடியாது*

*இதற்கு முன் எதையெல்லாம் நேசித்தேன் என்பதும் தெரியாது*

*என் பிரிவை எண்ணி யார் எல்லாம் அழுகிறார்கள் என்பதும் தெரியாது*

*இன்னும் எதை முடித்து வைக்காமல் விட்டுப் போகிறேன் என்பதும் தெரியாது*

*மொத்தத்தில் எனக்கு எதுவுமே தெரியாது*

*இப்படி இருக்கையில்.....*

*இந்த நொடி எனக்கு எல்லாம் தெரியும்*

*ஏனெனில் மரணம் என்னை கைப்பிடிக்க வில்லை*

*அதனால்த்தான் நான் அதிகமாக எல்லோரையும் நேசிக்கிறேன்*

*என்னை வெறுப்பவர்களையும் வெறுத்தவர்களையும் நேசிக்கிறேன்*

*என்னை ஏமாற்றியவர்களையும் ஏமாற்றிக் கொண்டிருப்பவர்களையும் கூட நேசிக்கிறேன்*

*இவர்களை மட்டுமா நேசிக்கிறேன்...??*

*இல்லை ...இல்லை*

*இயற்கை அன்னையையும் அவள் தந்த கொடைகளையும் நேசிக்கிறேன்*

*உறவுகளையும் அவர்கள்தம் உணர்வுகளையும் நேசிக்கிறேன்*

*இசையையும் அதைத் தந்த கலைஞர்களையும் நேசிக்கிறேன்*

*இந்த நொடி நேசிக்க எதெல்லாம் முடிகிறதோ அதெல்லாவற்றையும் நேசிக்கிறேன்*

*ஒன்றும் விடாமல் நேசிக்கிறேன்*

*ஏனென்றால்*

*என்னுடன் மரணம் கூடவேதான் பயணிக்கிறது*

*எந்த நொடி என்னைக் கைப்பிடிக்கும் என்று தான் தெரியாது!!*

# அந்த நாள்..

-ஆரணன் மதியழகன்(10)-

வாசுவும் அவரின் நண்பன் விஜையும் சரியான குழப்படி பிள்ளைகள். அவர்கள் எல்லோரையும் துன்பப் படுத்தினார்கள். அவர்கள் தெருவில் கிறுக்கினார்கள்.

ஒரு முறை இந்த பிள்ளைகளும் கொழும்பில் இருக்கின்ற ஒரு முகாமிற்கு ஒரு கிழமைக்கு சென்று தங்கினார்கள். முகாமில் வாசுவும் விஜையும் ஒரே கூடாரத்தில் படுத்தார்கள். மூன்றாவது நாளில் கிளித்தட்டு விளையாடினார்கள். போட்டியில் தோல்வி அடையும் போது அவர்கள் மற்றவர்கள் விளையாடுவதை பார்த்துக்கொண்டு இருந்தார்கள்.


நிறைய பிள்ளைகள் நின்ற போது விஜை வாசுவுக்கு சொன்னான் ''ஜக்சனை வெளியே கூட்டிக்கொண்டு போய் அவனின் காசை பறித்து வா'' வாசு ஜாக்சனிற்கு கேட்டான் ''காசு கொடுப்பாயா? அதை பிறகு திருப்பி கொடுப்பேன்''

ஜக்சன் பணப்பையை சட்டைப்பையிலிருந்து வெளியே எடுத்தார். வாசு பணப்பையை பறித்துக் கொண்டு எடுத்து ஓடினார். அவரின் நண்பர்கள் ஒரு குழியை வெட்டினார்கள். வாசு பணப்பை குழியில் போட்டு திரும்பி நிரப்பினார்கள். ஜக்சன் வாசுவை விட பலசாலி. ஜக்சன் வாசுவை கேட்டான் ''என் பணப்பை திருப்பி கொடு!'' ''இல்லை,'' பதில் அளித்தான் வாசு.



ஜக்சன் வாசுவை கண்ணில் அடித்துச் சொன்னான், ''குடு!'' வாசுவின் கண் ஊதா நிறமாகியது. வாசு ஆசிரியரிடம் ஓடினான். ஜக்சன் வாசுவின் பின்னால் ஓடி வந்தான். வாசு ஆசிரியரிடம் சொன்னார், ஜக்சன் என்னை அடித்தான்" ''அவர் என் பணப்பையை எடுத்தான்.'' பதில் அளித்தான் ஜக்சன்.

வாசுவின் தண்டனை முகாமின் விளையாட்டுகளில் பங்குபெற்ற முடியாது. ஜக்சனின் தண்டனை குப்பைகள் பொறுக்க வேண்டும்.



சூரிய குடும்பம்
சூரியன்
புதன
வியாழன்
பூமி
வெள்ளி
யுரேனஸ்
செவ்வாய்
சனி
R.நிருதித்
Prep
நெப்ரியூன
புளூட்போ

## மிருதங்கம்

- அபிதாரணி சந்திரன்-

மிருதங்கம் ஒரு இந்து தாள வாத்தியக்கருவி ஆகும். மிருதங்கம் கர்நாடக சங்கீத கச்சேரிகளில் வாசிக்கப்படுகின்றது. கர்நாடக இசை நிகழ்ச்சிகளில், சிறப்பாக வாய்ப்பாட்டு நிகழ்ச்சிகளில், மிருதங்கம் முக்கியமாக இடம்பெறும். மிருதங்கம் தொன்மையான வரலாற்றைக் கொண்ட ஒரு இசைக்கருவி எனக் கருதப்படுகிறது. இதையொத்த இசைக்கருவி சிந்துவெளி நாகரீக காலத்திலும் புழக்கத்திலிருந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன.

முதிர்ந்த பலாமரத்தைக் கடைந்து செய்யப்படும் இந்த வாத்தியத்தின் நடுப்பகுதி பெருத்தும், வாத்தியத்தின் வாசிக்கப் படும் இருபக்கங்களும் நடுப்பகுதியை விடச் சிறியதாகவும் அமைந்திருக்கும். தோலால் மூடப்பட்ட இருபக்கங்களையும் தோல்வார் இணைத்திருக்கும். வலப் பக்கத்தை வலந்தலை என்றும் இடப் பக்கத்தை இடந்தலை அல்லது தொப்பி என்றும் கூறுவார்கள்.. வலந்தலையின் நடுவே கரணை இடப்பட்டிருக்கும். கிட்டான் என்ற



இசைக்கும் ஆடலுக்கும் பயன்படுத்தப்படும் இந்தக் கருவியைப் பற்றிய ஒரு சில விடயங்களை நான் பார்த்ததும், படித்ததும், கூகிளில் சில தகவல்களைப் பெற்றதில் இருந்தும் தருகின்றேன்..

மிருதங்கம் பலா மரத்தாலும் ஆட்டுத்தோலாலும் தயாரிக்கபடுகிறது.

ஒருவகைக் கல்லைப் பொடியாக்கி சோற்றுடன் கலந்து அடுக்கடுக்காக மத்தியில் வைக்கப்படும். இதனாலேயே மிருதங்கம் சுருதி வாத்தியம் ஆகின்றது.

ஆரம்ப காலத்து மிருதங்க வித்துவான்களாகக் கருதப்பட்டவர்களில் சிலர் பாலக்காடு மணிஐயர், பழனி சுப்பிரமணிய பிள்ளை, காரைக் குடி மணி, தஞ்சாவூர் வைத்தியநாத ஐயர், பாலக்காடு

R.ரகு, திருச்சி சங்கரன், உமையாள்புரம் கே. சிவராமன், தஞ்சாவூர் நாராயண சாமி அப்பா போன்றோரைக் குறிப்பிடலாம்

கடந்த காலங்களில் மிருதங்கம் ஆண்களின் கைகளுக்குத் தான் உரிமையாகக் கருதப்பட்டது. ஆனால் பெண்கள் இப்பொழுது எல்லாத் துறையிலும் முன்னேறிக் கொண்டு வருவதால் என்னைப் போன்ற சிறுமிகளும் இன்று மிருதங்கக் கலையில் சேர்ந்து பயின்று கொண்டுவருகிறார்கள். முதலில் அண்ணா தான் இந்த மிருதங்கக் கலையைப் பயில ஆரம்பித்தார். எனக்கு அதன் இசையில் ஆர்வம் ஏற்பட்டது. அண்ணா வகுப்பில் மிருதங்கம் வாசிக்கும் போதெல்லாம் நானும் அதை எடுத்து வாசிப்பேன் அண்ணாவின் குரு திரு ஜோகராஜா கந்தசாமி அவர்கள் எனக்கு ஊக்கம் தந்து நானும் இந்தக் கலையைக் கற்கலாம் என்று கூறினார். அப்பாவிடம் அனுமதி பெற்றுக் கொண்டு இன்று வரை மிகவும் ஆர்வத்துடன் விருப்பமாகக் கற்றுக் கொண்டு வருகின்றேன். நவராத்திரி காலங்களில் நானும் அண்ணாவும் பல கோவில்களிலும் இசை நிகழ்ச்சிகளிலும் எமது குருவின் வழிநடத்தலுடன் பங்குபற்றியுள்ளோம். என் போன்ற சிறுமிகளும் இந்தக் கலையைப் பயிலவேண்டும் என்பது எனது ஆசை. இந்தக்கலை ஆண்கள் மட்டும் பயிலும் கலை அல்ல .பெண்களும் இதில் பங்கு பற்றும் பொழுது அந்த நிகழ்ச்சி சிறப்பாக அமையும் என்பது எனது கருத்து. நான் சமீபத்தில் மிருதங்கச் சக்கரவத்தி, படையப்பா போன்ற படங்கள் பார்த்தேன் அதில் மிருதங்கத்துக்கு கொடுத்திருக்கும் முக்கியத்துவம் மிகவும் என்னைக் கவர்ந்திருந்தது. எனவே எந்த ஒரு கலையையும் வேறுபாடு பார்க்காமல் நாங்கள் பயின்று வந்தால் கலைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளலாம்.

## பாரதி விளையாட்டுப் போட்டி...

-ஜாகுலன் ரமேஷ்-

நான் நவம்பர் 1ம் திகதி பாரதி பள்ளியின் விளையாட்டுப் போட்டியில் பங்கெடுத்தேன். இந்த விளையாட்டுப் போட்டியில் பாரதி பள்ளியின் 5 வளாக மாணவர்களும் பங்கெடுத்தனர். நானும் எனது 2 சகோதரர்களும் கம்பர் அணிக்காக விளையாட்டுப் போட்டியில் பங்கெடுத்தோம்.

இந்த விளையாட்டுப் போட்டியில் மாணவர்கள் எல்லோரும் கம்பர், இளங்கோ, வள்ளுவர் என்ற 3 அணிகளுக்காக பங்கு பற்றினர்.இந்த முறை இளங்கோ அணி 1ம் இடத்தையும் கம்பர் அணி 2ம் இடத்தையும் வள்ளுவர் அணி 3ம் இடத்தையும் பிடித்தன.

நான் எனது நண்பர்கள், சகோதர்ரகளுடன் நன்றாக ஓடியாடி மகிழ்ந்தேன்.

# ஆர்கிமிடீஸ்(*Archimedes*) மறைக்கப்பட்ட கதை...

-ஆரூரன் மதியழகன் *(13)*-

இவர் சிசில்யா [Sicily] நாட்டைப் போரில் தோற்காமல் பாதுகாத்தார். சிசில்யா குடிமக்களின் கனவுகளை நனவாக்கினார். அனைவராலும் விரும்பப்பட்டார். இவர் யார்? ஒரு படையா? ஒரு அரசனா? ஒரு போராளியா? இல்லை. அவர் கணித மேதை ஆர்கிமிடீஸ் ஆவார்.

ஆர்கிமிடீஸ், சிசில்யா என்ற நாட்டில் சைரகூஸ் [Syracuse] என்ற ஊரில், கிறிஸ்துக்கு முன் 287 ஆம் ஆண்டு ஃபிடியஸ்[Phidias]சின் மகனாகப் பிறந்தவர்

ஆர்கிமிடீஸ் கணித மேதை [mathematician] மட்டும் அல்ல. அவர் ஒரு இயற்பியலாளர் [physicist], பொறியியலாளர் [engineer], விஞ்ஞான கண்டுபிடிப்பாளர் [inventor] மற்றும் வானியல் ஆராய்ச்சியாளர் [astronomer].

ஆர்கிமிடீஸ் பற்றி, எல்லோருக்கும் தெரிந்த கதை இதுதான் – ஒருமுறை ஆர்கிமிடீஸ், ஒரு தங்க முடியின் கன அளவைக் கண்டுபிடிக்கவேண்டி இருந்தது. ஒரு யோசனையும் வரவில்லை. அதை யோசித்தபடியே, அடுத்த நாள், குளிக்கப் போனார். தண்ணீர் தொட்டியுள் இறங்கும் போது தண்ணீர் மட்டம் ஏறுவது தெரியவந்தது. அந்த நிமிடம், அவருக்கு தன் எடைதான் நிலத்தில் இருக்கும் தண்ணீரின் அளவு என்ற விடயம் விளங்கியது. உடனே அவரின் யோசனைக்கு, பதில் விளங்கியது. உடனே, அவர் ஆடை இல்லாமல், மிகுந்த மகிழ்ச்சியுடன் யூரேக்கா! என்று கத்தி, அரசனிடம் வேகமாக ஓடினார்.

என் கதை வித்தியாசமானது. எங்கள் கதை, ஒரு போரின்போது தொடங்குகிறது. இதில் நிறைய நாடுகள் ஈடுபட்டன. ஆனால், ஒரு முக்கிய நாடு ஆதிக்கம் செலுத்தியது – ரோமப் பேரரசு [The Roman Empire]. இக் கதையில், ரோமப் பேரரசு, இத்தாலியின் தெற்கு திசையூடாக, கப்பலில் சிசில்யா நாட்டிற்குச் சென்றது. இதை அறிந்து, சிசில்யா அரசன், தன் படையை தயார் செய்து, போருக்கு ஆயத்தமானார். மேலும், அவர் ஆர்க்கிமிடீஸ் [Archimedes] சிடம் போரில் வெல்வதற்கான ஆலோசனை கேட்டார். அப்போது, உயிரை அச்சுறுத்தியே ஆலோசனை கேட்டார். ஆர்க்கிமிடீஸ் யோசிக்கும்போது, சூரியனைக் கண்டார். அப்பொழுது, ஒரு திட்டம் மனதில் உருவானது. ரோமப் பேரரசின் கப்பல்களை எரிக்கலாம் என்பதே அத்திட்டம்.

அரசன், கடலில் இருக்கும் கப்பல்களை எப்படி எரிக்கலாம் என்று யோசித்தார். அதற்கு, எங்கள் கணித மேதை ஒரு திட்டம் வைத்திருந்தார். கண்ணாடிகள் பாவித்து சூரிய ஒளியைப் பிரதிபலித்து, கப்பல்களை எரிக்கலாம் என்பதே அது. இதைக் கேட்டு அரசன் கடல் பாறை மீது

கண்ணாடிகள் வைக்க உத்தரவிட்டார். சில கப்பல்கள் எரிந்து போனது. ஏனைய கப்பல்கள், இத்தாலிக்குத் திரும்பி சென்றன. சிசில்யா, இந்தச் சண்டையில் வெற்றி பெற்றார்கள். ஆனால், போரில் வெல்லவில்லை. ஏனென்றால், ரோமப் பேரரசு மீண்டும் பலமாகத் தாக்கினார்கள்.

இந்த முறை, அவர்கள் இரவில் தாக்கினார்கள். அரசன் மீண்டும் ஆர்கிமிடீஸிடம் கேட்டார். ஆர்கிமிடீஸ் பாறையில் இருக்கும் பெரிய கற்களை, தூக்கி எறிந்தால், ரோம கப்பல்களை அழிக்கலாம் என்பதை யோசித்தார். ஆனால், அதில் ஒரு சிக்கல் இருந்தது. அந்தக் கற்கள், மிகவும் பாரமான கற்கள். இதன்படி, ஆர்கிமிடீஸ் எப்படி அந்தக் கற்களை அசைக்கலாம் என்று யோசித்தார். அப்பொழுதுதான் அவர் கப்பி தொகுதி அமைப்பு என்று கண்டுபிடித்தார். (Block and tackle pulley system) பெரிய தொகுதியில் கயிறு மேலாகப் போடப்பட்டு, கல்லுக்கு இணைக்கப்பட்டது. தொகுதியின் மற்ற பக்கம், மனிதன் கயிற்றை இழுப்பான். இதன்படி, கல் அசைக்கப்பட்டு கப்பலில் வீழ்த்தப்பட்டது. ஒரு அழிக்கப்பட்ட கப்பலை பார்த்து, மற்ற கப்பல்கள் இத்தாலிக்குப் பயந்து ஓடின. சிசில்யா இன்னொரு சண்டையிலும் வென்றது.

ஒன்றும் செய்ய முடியாமல், ரோமப் பேரரசு மீண்டும் சிசில்யாவிற்கு இரகசியமாகப் படை எடுத்துச் சென்று, சிசில்யாவை கைப்பற்றியது. ரோம பேரரசன், தனது கப்பல்கள் தாங்கமுடியாமல் போன சூழ்ச்சிகளை செய்தவனை மரியாதை செய்ய ஆசைப்பட்டான். அதற்காக, அவர் தனது போராளிகளுக்கு, ஆர்கிமிடீஸை தனது கண் முன் நிறுத்த வேண்டும் என்று கட்டளையிட்டார். அதன்படி, அந்தப் போராளிகள் சைரகூஸ் ஊரில் தேடினார்கள். அங்கே, இந்த விடயங்கள் ஒன்றும் தெரியாமல், ஆர்கிமிடீஸ் ஒரு சமாதியில் கணித சமன்பாடுகள் எழுதிக்கொண்டிருந்தார். அப்பொழுது இரண்டு போராளிகள், ஆர்கிமிடீஸ், என்று தெரியாமல், பேரரசனிடம் வரவேண்டும் என்று கேட்டார்கள். ஆர்கிமிடீஸ் இல்லை என்று சொன்னார். அவ்விரண்டு போராளிகள், கோபத்தில் ஆர்கிமிடீஸை கொன்றார்கள். சிறிது நேரத்திற்குப் பின், சமூகத்தினரிடம் விசாரித்து, அந்த இரு போராளிகள், அவர்கள் கொன்ற மனிதன்தான் ஆர்கிமிடீஸ் என்று கண்டு பிடித்தார்கள். அவர்கள் பேரரசனிடம் சென்றார்கள். பேரரசன் ஆழ்ந்த கவலைக்கு உள்ளானார். ஆர்கிமிடீஸிற்கு மதிப்பும் மரியாதையும் கொடுக்க வேண்டும் என்று நினைத்த பேரரசன், சிசில்யா அரசனிடம் விசாரித்தார்கள். அவர்கள், ஆர்கிமிடீஸிற்கு ஒரு நடுகல் கட்டவேண்டும் என்று தீர்மானித்தார்கள்.

இதுதான், ஆர்கிமிடீஸ் பற்றி, தெரியாத கதை. ஆர்கிமிடீஸ் கணித சமன்பாடுகள் மட்டும் கண்டு பிடிக்கவில்லை. தனி மனித போராக, எதிரிகளை அழிக்க, புதிய விடயங்கள் கண்டுபிடித்து, போரில் வென்றார்.


தமிழர் திருநாள்
- 2017 -

# தமிழ்!

*தமிழ் அழிந்து போகுதடா தம்பி*

*ஆங்கிலத்தை நீ கட்டி ஆழுவதென்ன நம்பி*

*உன் நாவில் தமிழ் இருக்கு குந்தி-நீ*

*உரைக்க வேணும் நாளும் அதை திருத்தி*

*செம் மொழியும் வளரும் இந்த நாட்டில்*

*சேர்ந்து கேட்டால் அரசு ஏற்றும் ஏட்டில்*

*வாய் விட்டுச் சொன்னால் —தமிழ்*

*வேர் விட்டு வளரும்*

*நாளை இங்கே பயிராகும்.*

*சோறு போடாத மொழி தமிழ்*

*சொல்வோர் பலருண்டு*

*சோர்வடையாது வளர்ப்போம் தமிழை*

*பலர் இணைந்து*

*தமிழ் எங்கள் மொழி*

*உரக்கச் செய்வோம்*

*தமிழ் எங்கள் அடையாளம்*

*நிலைக்கச் செய்வோம்*

**-ஆவூரான்-**

# நாமும் எமது சூழலும்..

-கீர்த்திகன் சீவராஜா-

நாம் வாழும் இந்த பூமி, சூரிய குடும்பத்தைச் சேர்ந்தது என்று எல்லோருக்கும் தெரியும். இந்த பூமியிலே வாழும் எல்லா உயிரினங்களுக்கும் மிக அத்தியாவசியமாக தேவைப்படுவது காற்று, தண்ணீர் மற்றும் உணவு ஆகும். இவை இல்லாமல், எவரும், எவையும் உயிரோடு வாழ முடியாது.

நாங்கள் சுவாசிக்கும் காற்று, குடிக்கும் தண்ணீர், உண்ணும் உணவு எல்லாம் சுத்தமாக இருக்கவேண்டும். இதற்கு நாங்கள் எல்லோரும் இவற்றை சுத்தமாக பாதுகாக்கவேண்டும்.

பல நூற்றாண்டுக்கு முன்பு, மனிதர்கள் இந்த உலகத்தை நன்றாக பார்த்து கவனித்து வந்தார்கள். ஆனால், இந்த நவீன காலத்தில், மனிதர்களாகிய நாம் இந்த உலகத்தை அசுத்தமாக்குகிறோம். இதனால்தான், எங்களுடைய இந்த பூமியிலே, இயற்கையான பிரச்சனைகள் ஆரம்பம் ஆகிவிட்டது. இந்த பூமியையும், அதன் சுற்றாடலையும் அசுத்தமாக்கினால், அதை நாங்கள் சூழல் மாசடைதல் என்று கூறுவோம்.

சூழல் மாசடைதல் பல வகையாக நடைபெறும். அவற்றில் ஒன்று காற்று. காற்று மாசடைதல் என்றால், மனிதனின் சுவாசிக்கும் காற்றை அசுத்தமாக மாற்றுவது. இது, மோட்டார் வண்டிகளின் பாவனையால் அதிலிருந்து வெளிவரும் புகை, சுத்தமான காற்றை அசுத்தமாக ஆக்குகிறது. அது மட்டுமல்ல, தொழிற்சாலைகளில் வெளியேறும் அசுத்த காற்று, பூமியின் சுத்தமான காற்றை அசுத்தமாக்கும். இவை பல்லாயிரக்கணக்கான தொழிற்சாலைகளில் வேலை நடக்கும்போது, மிக அதிக அளவில் அசுத்த காற்று வெளி வந்து சூழலை மாசடையைச் செய்யும்.

அடுத்ததாக தண்ணீர் மாசடைதல். தண்ணீர் மாசடைதல் என்றால், நீரை அசுத்தமாக்குதல் ஆகும். உதாரணமாக, நாம் குப்பைகளை குப்பைத்தொட்டியில் போடாமல், வீதியில் போடுவதால், மழை பெய்கின்ற போது ஏற்படும் வெள்ளத்தினால் ஆற்றிலோ அல்லது ஏரிகளிலோ சென்றடைந்து சுத்தமான நீரை அசுத்தமாக்குகிறது. அது மட்டுமல்ல, தொழிற்சாலைகளிலிருந்து இரசாயன கழிவுப் பொருட்களும் ஆற்று நீரில் கலந்து கடலில் சேர்ப்பதன்மூலம், மனிதர்களாகிய நாம் அந்த நீரை அசுத்தமாக்குகிறோம். இதைத்தவிர மனிதர்களாகிய நாம் மிக அதிகளவில் 'பிளாஸ்ட்டிக்' பொருட்களை பாவிக்கின்றோம். இதன் உற்பத்தியினால் ஏற்படும் இரசாயன கழிவுப் பொருட்களும், பாவனையின் பின் அழிக்க முடியாமல் வீசுவதாலும் சூழல் மாசடைகிறது.

அடுத்து, இந்த பூமியில் நடக்கும் யுத்தங்களால் மனிதர்கள் பாவிக்கின்ற இரசாயன ஆயுதங்கள், அணு ஆயுதங்களின் பாவனையால் சூழல் மாசடைகிறது.

இதனால், எமது இந்த பூமியை பாதுகாக்கும் ஓசோன் படையில், துவாரம் ஏற்பட்டிருப்பதை நாம் எல்லாரும் அறிந்திருக்கின்றோம். இப்படியாக பல்வேறு வழிகளில் மாசடையும் இந்த உலகத்தை மனிதர்களாகிய நாம், சுத்தமாக வைத்திருப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்று சிந்தித்தால்...

மோட்டார் பாவனையால் வெளிவரும் அசுத்தமான காற்றை குறைப்பதற்கு அதிக அளவிலான மோட்டார் வண்டிகளின் பாவனையை குறைக்கவேண்டும் அல்லது சூரிய சக்தியினால் ஓடும் மோட்டார் வண்டிகளை பெரியளவில் உற்பத்தி செய்து பாவனையில் விடவேண்டும். அடுத்து, குப்பைகளை குப்பத்தொட்டியில் போடவேண்டும்.

அடுத்து, 'பிளாஸ்ட்டிக்' பொருட்களின் பாவனையை குறைக்க வேண்டும், அல்லது இல்லாமல் ஒழிக்க வேண்டும். அதற்கு எடுத்துக்காட்டாக, தமிழர்களாகிய எமது முன்னோர்கள் உணவு உண்பதற்கு வாழையிலையினை பயன்படுத்தியதைப் போல், நாம் 'பிளாஸ்ட்டிக்' கோப்பைகளை பாவிக்காமல் வாழையிலையினை பாவித்தால் மிக நன்றாக இருக்கும்.

அத்துடன் யுத்தங்களில் இரசாயன, அணு ஆயுத பாவனையை இல்லாதொழிக்க யுத்தங்கள் ஏற்படாமல் பார்த்து, மனிதர்களாகிய நாம் சமாதானமாக இருக்க வழி வகுக்க வேண்டும்.

எனவே மனிதர்களாகிய நாம் இந்த உலகத்தை சுத்தமாக பாதுகாக்கவேண்டும். நாங்கள் இதை இன்னும் செய்யவில்லை என்றால், நிகழ்காலத்திலோ அல்லது எதிர்காலத்திலோ இந்த உலகம் அழிந்த போகக்கூடும். இதை உடனே நாம் செய்தால், எங்களுடைய உலகத்தை ஒருபோதும் அழியாமல் பாதுகாப்பதோடு, சூழலையும் சுத்தமாக வைத்திருக்க முடியும்.

## பாம்பு!

-கேஷினி ராஜ்குமார்-

பாம்புகளில் பல இனங்கள் உண்டு. அவைகளிற் சில: நாகபாம்பு, சாரைப்பாம்பு, கோடரிப் பாம்பு, மலைப் பாம்பு போன்ற அநேக இனங்கள் உண்டு. அநேகமான பாம்புகள் மனிதரைக் கடித்தால் விஷத்தைக் கக்கும். இதனால் மனிதர் மரணத்தைத் தழுவ நேரிடும்.

தற்போது நவீன வைத்தியத்தின் உதவியோடு பாம்புக் கடியைக் குணமாக்கலாம். பாம்புகள் அதிகமாகக் காடுகளில் வசிக்கும். இவை சிறு பிராணிகளையும், பறவைகளின் முட்டைகளையும் உணவாகக் கொள்ளும். பாம்புகள் காலத்துக்குக் காலம் தம் செட்டைகளைக் கழட்டும். நீரில் வாழும் பாம்புகளும் உண்டு.

பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும் என்பர். பாம்பு ஒரு நஞ்சுள்ள ஊரும் பிராணி. சிலர் பாம்பை தெய்வமாக வணங்குவோரும் உண்டு. பாம்பின் விஷத்தைக் கொண்டு மருந்துகளும் தயாரிக்கலாம்.

# அறிவுள்ள நாய்க்குட்டி...

- துவாரகன்-

அழகான அந்த கிராமம், அங்கே பெரிய ஒரு ஆலமரம், அதற்கருகில் முருகன் கோவில். ஒவ்வொரு நாளும் மாலை நேரத்தில் நானும் எனது நாய் குட்டியும், அங்கு வந்து பந்து விளையாடுவது வழக்கம். அந்த கோயிலின் மகிமையை அறிந்த பக்கத்தூர் மக்கள், திருவிழா நாட்களிலும், வெள்ளிக்கிழமைகளிலும் கூட்டம் கூட்டமாக வருவார்கள். அதனால் மக்கள் தொகை அதிகமாக இருக்கும்.

ஒருநாள் மாலை நேரம், நானும் எனது நாய்குட்டியும் வழமைபோல பந்து விளையாடிக்கொண்டிருந்தோம். பொழுது மெல்ல மெல்ல இருண்டு கொண்டு வந்தது . அப்பொழுது, ஒரு உருவம் கோவிலுக்குள் நடந்து போவதை எனது நாய்க்குட்டி கண்டு குரைத்தது. நான் அதைப் பெரிதுபடுத்தவில்லை. நாய்க்குட்டி என்றால் எல்லோரையும் பார்த்துக் குரைப்பதுதானே என நினைத்துக்கொண்டு நான் வீடு திரும்பினேன். ஆனால் எனக்கு தூக்கம் வரவில்லை, நாய்க்குட்டி குரைத்த விதத்தில் வித்தியாசம் தெரிந்தது. அந்த உருவம் எனது மனதைக் குழப்பிக்கொண்டிருந்தது. எனது மனதுக்குள் நிறையக் கேள்விகள் உண்டாகின. கேள்விகள் இத்தனைக்கும் பதில் கண்டு பிடிக்க நானும் எனது நாய்க்குட்டியும், கோவிலுக்கு மெதுவாகச்சென்றோம்.

அங்கே போன போதுதான் சத்தங்கள் நிறைய கேட்டன. நானும் எனது நாய்க்குட்டியும் மெது மெதுவாக கோவிலுக்குள் போனோம், அங்கே இரண்டு கள்வர்கள் முருகன் சிலையையும், வெவ்வேறு நகைகளையும் திருடிக்கொண்டு ஓடினார்கள்.

மறுநாள் காலையில் கோவிலைச் சுற்றி மக்கள் கூட்டம் கூட்டமாகக் கூடி இருந்தனர். அங்கே கோவில் பூசாரி திருடர்கள் கோவில் நகைகளையும் சுவாமி சிலைகளையும், திருடிவிட்டார்கள் என சொல்லிக்கொண்டு இருந்தார். எனது நாய்க்குட்டி கோவில் வாசலில் கிடந்த செருப்புகளை மணந்து பார்த்தது. பிறகு போலிஸ்கார்ர்கள் வந்து அவர்களின் கடமையை செய்து விட்டுப் போனார்கள்.

மாதக்கணக்காகிவிட்டது, போலிஸ்காரரால் ஒன்றையும் கண்டுபிடிக்கவில்லை. ஆனால் எனக்கும் எனது நாய்க்குட்டிக்கும் உறக்கமே வரவில்லை. . ஒரு நாள், நானும் எனது நாய்க்குட்டியும் பக்கத்து ஊருக்கு எனது சைக்கிளில் போய்க்கொண்டிருந்தோம். அப்போது, எனது நாய் குதித்து ஓர் மரத்தின் கீழ் மண்ணைக் தோண்டிக்கொண்டிருந்தது. ஆனால் எனது நாய் அதைத் தோண்டிமுடிப்பதற்குள் ஓர் கறுப்பு உருவம் எனது நாய்க்குட்டியை கலைத்தது. நான் நாய்க்குட்டியை அழைத்துக்கொண்டு வீடு திரும்பினேன்.

இந்த உருவத்தையும் கோவிலில் கண்ட உருவத்தையும் நான் ஞாபகபடுத்தினேன். ஏதோ ஒன்று என் மனதைக் குழப்பியது.

எனக்குத் தூக்கமே வரவில்லை. காலை 7:30க்கு எழும்பிய நான், எனது நாய்க்குட்டியையும், எனது இரு நண்பர்களையும் அழைத்துக்கொண்டு அந்த மரத்திற்கு அருகில் போனோம். அங்கே எனது நாய்க்குட்டி தோண்டிக் கொண்டிருந்ததை நான் முடித்து வைத்தேன். அந்தக் கிடங்கிற்குள் கோவில் நகைகளும் சிலைகளும் இருந்தன. அதை நானும் எனது நண்பர்களும் துணிகளால் சுற்றி எடுத்துக்கொண்டு காவல் நிலையத்திற்குப் போனோம்.

எனக்கு மிகவும் மகிழ்ச்சியாகவும் சந்தோஷமாகவும் இருந்தது. ஆனால் அந்த உருவத்தை யார் எனக் கண்டுபிடிக்கவில்லை என்ற ஒரேயொரு ஏக்கமும் யோசனையும் தான் மனதை வாட்டியது. நான் எழும்பிப் பள்ளிக்கூடம் போவதற்குத் தயாராகினேன். அப்போது ஓர் உருவம் எனக்கு பின்னால் போவதைக் கண்டேன், என் மனதில் இந்த உருவத்தை எங்கேயோ பார்த்த ஞாபகம். அதை ஓடிப் பிடிக்கப்போகும் போது, அது அணிந்திருந்த கறுப்புச்சீலை கீழே விழுந்தது. அந்த உருவம் என்னை பார்த்து சிரித்தது. "நீ....நீ.... இன்னமும் பாடசாலைக்கு போகவில்லையா" எனக்கேட்டது. நான் அதிர்ச்சியால் உறைந்து போனேன. அந்தக் கறுப்பு உருவம் வேறுயாரும் இல்லை எனது அண்ணனே.

## கிரிக்கெட் விளையாட்டு

*-ஜனனன் ரமேஷ்-*

எனக்கு எல்லா விளையாட்டுக்களும் பிடிக்கும். இதில் கிரிக்கெட் விளையாடுதல் எனக்கு முதலாவதாக பிடிக்கும். கிரிக்கெட் விளையாடுவது எங்கள் உடம்புக்கு நல்லது. கிரிக்கெட் விளையாட 2 அணிகள் தேவை. ஒவ்வொரு அணியிலும் 11 பேர் விளையாடுவார்கள். கிரிக்கெட் டெஸ்ட் போட்டி ஒரு நாள் போட்டி T20 போட்டி என்று வித்தியாசமாக விளையாடுவார்கள். 20$^{க்கு}$ மேற்பட்ட நாடுகளில் கிரிக்கெட் விளையாடுகிறார்கள். 10 நாடுகளில் மாத்திரம் டெஸ்ட் போட்டி விளையாட அந்தஸ்து உள்ளது. இப்பொழுது டெஸ்ட் தர வரிசை இந்தியா 1$^{வது}$ இடத்திலும் அவுஸ்திரேலியா 2$^{ம்}$ இடத்திலும் பாகிஸ்தான் 3$^{ம்}$ இடத்திலும் உள்ளது. சச்சின் டென்டுல்கர், ரிக்கி பொன்டிங், முத்தையா முரளிதரன், ஷென் வோர்ன் எனக்குப் பிடித்த நல்ல கிரிக்கெட் வீரர்கள். நானும் எனது சகோதரர்களும் கோடை காலத்தில் கிரிக்கெட் விளையாடி வருகிறோம்.

# எங்கள் வீட்டுப் பிள்ளை..

-காவியன் பத்மசிறி-

போன வருடம் நாம் நத்தார் விடுமுறைக்கு யாழ்ப்பாணத்திற்குப் போயிருந்தோம். அங்கு எமது பாட்டா இருப்பதால் நாம் அவரின் வீட்டில் போய் நின்றோம். பாட்டாவுக்கு மரங்கள் வளர்ப்பதென்றால் நல்ல விருப்பம். அதனால் அவரின் வீட்டைச் சுற்றி சோலையாக எல்லா மரங்களும் இருக்கின்றன. தென்னை, மா, பலா, பாக்கு, முருங்கை, தேசிக்காய், நெல்லி, நாவல் மரம் என்று சொல்லிக்கொண்டே போகலாம். அதனால் வீட்டுத் தேவைக்கான தேங்காய், மரக்கறிகளை அவரின் காணியில் இருந்தே பெற்றுக்கொள்ளலாம். தேங்காய்ப் பாலில் கறிகள் செய்து உண்ணும் போது எவ்வளவு சுவையாக இருக்கும் என்று அங்கு சாப்பிடும் போதுதான் உணர்ந்தேன்.

நாம் அங்கு நின்ற போது, பாட்டா தென்னை மரத்தில் இருந்து விழும் ஓலைகளில் இருந்து கிடுகு எப்படிப் பின்னுவது என்று காட்டித் தந்தார். முன்பெல்லாம் கிடுகுகளால் தான் வீட்டு வேலிகளை அடைப்பார்கள். ஆனால் இப்போது எல்லாம் அது குறைந்து விட்டது என்று பாட்டா கூறினார்.

பாட்டாவின் தோட்டத்து மூலையில் ஒரு அலவாங்கு இருந்தது. அதில்தான் பாட்டா தேங்காய் உரிப்பார். அவர் தனது கையை காயப்படுத்தாது எவ்வளவு இலகுவாக தேங்காய் உரிப்பதை நான் வியப்புடன் பார்த்தேன். தேங்காயை எடுத்து அம்மாவிடம் சமையலுக்கு கொடுத்துவிட்டு கோம்பைகளை ஒரு குவியலாக அடுக்கி வைப்பார். ''இதை என்ன செய்யப் போகிறீர்கள் பாட்டா?'' என்று கேட்டேன். ''இதை அடுப்பு எரிக்கப் பாவிக்கலாம். ஆனால் இப்போது பலர் gas cooker பாவிப்பதால், கோம்பைகளை பாவிப்பதில்லை'' என்று கூறினார். இதிலிருந்து வரும் 'பொச்சை' இங்கு நாங்கள் sponge பாவிப்பதுபோல், பாத்திரங்கள் கழுவப் பாவிக்கலாம் என்று கூறினார்.

மத்தியான வெய்யிலுக்கு பாட்டா வீட்டு செவ்விளநீர் மரத்தில் இருந்து இளநீர் குடிப்பது எங்களுக்கு பிடித்தமானது. அதன் பின் தேங்காயை இரண்டாக வெட்டி உள்ளே இருக்கும் வழுகலை jelly என்று சொல்லி போட்டி போட்டு உண்டோம்.

காய்ந்து போன தேங்காய்களை பாட்டா ஒரு இடத்தில் அடுக்கி வைத்திருந்தார். அதை ஒருவர் வந்து வாங்கிச் சென்றார். ''அவர் அதைக் கொண்டுபோய் என்ன செய்வார்?'' என்று கேட்டேன். ''அதில் இருக்கும் கொப்பறாவை புளிந்து தேங்காய் எண்ணை எடுப்பார்கள். மிஞ்சும் சக்கையை புண்ணாக்கு என்று கூறுவார்கள். புண்ணாக்கை ஆடு, மாடுகளுக்கு கரைத்துக் கொடுத்தால் அவை அதை விரும்பிக் குடிக்கும்'' என்றார் பாட்டா.

தென்னையின் குருத்தோலையில் எப்படி தோரணம் செய்வது, பாம்பு

செய்வது என்று எல்லாம் காட்டித் தந்தார். எனது தங்கை தென்னை மரத்தடியில் இருந்து எடுத்து வந்த குரும்பைகளைக் கொண்டு தேர் செய்யவும் காட்டித் தந்தார்.

நாம் அங்கு நிற்கும்போது அம்மா தேங்காய்ப் பாலில் தொதல் செய்தார். அது என்ன ருசி!!

போன விடுமுறையில் நான் தென்னை மரத்திலிருந்து இத்தனை பயன்களைப் பெறலாம் என்று அறிந்து வியந்து கொண்டேன். இதில் நான் கண்டது சிலது. தென்னை மரத்தின் பாகங்கள் ஒவ்வொன்றிலும் பயன் இருக்கிறது என்று பாட்டா கூறினார். அதனால் தான் தென்னையை ''தென்னம் பிள்ளை'' என்று அன்பாக அழைப்பார்கள்.

## கல்விச் செல்வம்..

**-விசாகன் பசுபதிதாசன்-**

கல்வி என்பது உலகத்தில் மிகவும் சிறந்த செல்வமாகும். இதுதான் ஒருவனுக்கு உணவு, உடை, உறையுள் என்பவற்றை கொடுக்கும். கல்வி இல்லாமல் எதுவும் இல்லை.

முதலாவதாக, கல்வி இருந்தால்தான் பணம் உங்களுக்கு கிடைக்கும். கல்வி இருப்பதால் நல்ல வேலைகள் தேடி வரும். அதனால் நிறைய பணம் சம்பாதிக்கும் சம்பவங்களை எதிர்கொள்ள உதவும். கல்வி இல்லாமல் பணம் சம்பாதிப்பது கஷ்டம். ஒரு வேலை கிடைத்தாலும், அந்த வேலையில் கொடுக்கப்படும் பணம் போதாது. எனவே கல்விச் செல்வம் இருந்தால்த்தான் சிறந்த ஒரு வேலை பெற்று வாழ்வில் வெற்றி பெற முடியும்.

மற்றும், கல்விச் செல்வத்தால் அறிவு வளரும். வாழ்க்கையில் அறிவு இருந்தால்தான் வாழ்வில் வெற்றி அடைய முடியும். மற்ற பணச் செல்வம் போல இல்லாமல், இதை மற்றவர்களுக்கு சொல்லிக் கொடுப்பதால் எங்களுக்குத்தான் அறிவு கூடும். பணம் மற்றவர்களுக்கு கொடுப்பதால் அது விரைவில் முடிந்துவிடும். ஆனால், இது அப்படி முடிந்து போகாது, நீங்கள் வாழும் முழு வாழ்வுவரை இருக்கும். மற்றும், நீங்கள் பணத்தைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். ஆனால் உஙகளுக்கு இருக்கும் அறிவை ஒருவரும் எடுக்க முடியாது. கல்விச் செல்வத்தை வேறு எந்தக் காரணிகளாலும் அழிக்க முடியாது.

கல்விச் செல்வம்தான் ஒருவனுக்கு வாழ்க்கை கொடுக்கும். கல்விச் செல்வம்தான் நல்ல வாழ்க்கைக்கு வழி காட்டும்.


எனது குடும்பம்
சிவ்யா - 9 வயது
அம்மம்மா
அம்மப்பா
அம்மா
அண்ணை
நான்
அப்பா

# எத்திசை நோக்கிச் செல்லப்போகின்றோம்...

-மோஷிகா பிரேமதாசா-

கடல் கடந்து இந்த அவுஸ்திரேலிய மண்ணுக்கு வந்து சேர்ந்தாலும், நாம் எமது பண்பாடுகளையும் கலாசார விழுமியங்களையும் காத்து வாழ முடியவில்லை என்பது இங்கு வசிக்கும் பலருடைய கவலையாக இருக்கின்றது. குறிப்பாக, என்னைப் போன்ற அவுஸ்திரேலியா வாழ் வாலிபர்கள் இந்த கலாசார முரண்பாட்டினால் பாதிக்கப்பட்டு குழப்பமான மனநிலையில் தவறான செயல்களில் ஈடுபடுகின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. காலத்திற்கேற்ற வகையில் நாகரீகம் மாற்றமடைய இளைஞர்களின் பழக்க வழக்கங்களும் மாற்றம் அடைந்துகொண்டு வருகின்றது. ஆகையால் விடலைப் பருவத்தினர் தீய செயல்களில் ஈடுபட்டு பல்வேறு பிரச்சனைகளுக்கு உள்ளாகி வருகின்றனர்.

இன்று, திரை உலகத்தில் கொடி கட்டிப் பறக்கும் கலைஞர்களே வாலிபர்களுக்கு முன்னுதாரணமாக இருக்கின்றனர். நயன்தாரா மற்றும் திரிஷா போன்ற நடிகைகளின் நடை உடை பாவனை அனைத்தும் என்னைப் போன்ற யுவதிகளால் பின்பற்றப்படுகின்றன. இதனால் இயற்கை அழகை விட செயற்கை அழகுக்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டும் எனும் நம்பிக்கை உண்டாகி, நமக்குள் 'நான் அழகானவளல்ல' எனும் தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டு , மனோதத்துவ ரீதியாகப் பாதிக்கப்படுகின்றோம். ஆகையால் தான் சிறுவயதிலேயே மயிர் அகற்றல் மற்றும் சரும பராமரிப்பின் மீது அதிக அக்கறை எடுத்துக்கொண்டு, வேதியற் பொருட்களை உபயோகித்து எமது இயற்கை அழகை மெருகூட்டுவதாக நம்பி முட்டாள் போல் என்சோட்டுப் பெண்கள் ஏமாந்து விடுகின்றார்கள். அனால், நாம் எமது இயற்கை அழகை அழிக்கின்றோம் என்பது எமக்கு பின்பு தான் தெரிய வருகிறது. காலம் காலமாக எமது முன்னோர் பாவித்த கஸ்தூரி மஞ்சள், சந்தனம், தயிர் போன்றவை எவ்வளவுக்குப் பயன் தருகின்றன என்பதை நாம் ஏன் இன்னுமும் புரிந்துகொள்ளவில்லை ?

அதுமட்டுமல்லாமல் பொது இடங்களில் தவறான தகவல்களை ஊட்டும் வகையில் பெண்களின் புகைப்படங்களையும், துண்டுப்பிரசுரங்களையும் வெளியிட்டு விடலைப் பருவத்தினரின் மனதில் ,

' அழகு ' என்பதற்கு ஒரு பிழையான விளக்கத்தைக் கொடுக்கின்றனர். சிற்றாடைகளை அணிந்து தலை விரி கோலத்துடன் வதனத்தில் முகப்பூச்சுகளைப் பூசிக்கொள்வது அழகு இல்லை. வீதியில் ஒரு வாரமாக தங்குவதற்கு இடமில்லாமல் உணவுண்ணாமல் வறுமையின் கோரப் பிடியில் சிக்கிக்கொண்டு தவிப்பவர்களுக்கு உதவுவதே ஒரு மானிடனின் அழகை எடுத்துக்காட்டும். இருப்பினும் இது போன்ற ஆலோசனைகளை ஏன் எம்மால் சிந்திக்க முடியவில்லை?

எண்ணற்ற வலைத்தளங்களும் சமூக தொடர்பு சாதனங்களும் உலகை சீர்திருத்த முயற்சி செய்துகொண்டிருக்கும் வேளையில், நன்மை பயக்கும் இச்சாதனங்கள் , தீய செயல்களுக்காகவும் உபயோகிக்கப்படுகின்றன என்பதும் வருந்தத்தக்கது. இன்றைய நவீன உலகில், தொழில்நுட்பத்தின் வளர்ச்சி அதிகரிப்பதுடன் தொழில்நுட்பத்தினூடாக நடைபெறும் பாலியல் செயற்பாடுகளும் வளர்ந்துகொண்டு வருகின்றன. குறிப்பாக, விளையாட்டு என எண்ணி வலைத்தளங்கள் மூலம் நிர்வாணப் புகைப்படங்களை அனுப்புவதும், நண்பர்களுக்குத் தெரியாமல் அவர்களின் தனிப்பட்ட படங்களை வெளியிடுவது போல் அசிங்கமான, அவலட்சணமான நிகழ்வுகள் நடைபெறுவதும் இடம்பெற்றுவருகின்றன

"ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்றார் பொய்யாமொழிப் புலவர் வள்ளுவனார். ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் மீறுவதனால் சந்திக்கும் அவமானங்களை எதிர்நோக்குவதற்கான துணிவு இல்லாமல், சிலர் தற்கொலை செய்துவிடலாம் எனத் தீர்மானித்து மீண்டும் தவறு செய்கின்றனர்.

அதுமட்டுமல்லாமல், இளம் வயதிலேயே என்னைப் போன்ற பல வாலிபர்கள் பாலியல் உறவில் ஈடுபடுகின்றனர். பல நூற்றாண்டுகளுக்கு முன்பும் இப்பிரச்சனை இருந்தது ; இப்போதும் இருக்கின்றது. இருந்தாலும் கூட, எமது தமிழ்ச் சமூகத்தில் மிகவும் அரிதாகவே இது நடைபெறுகிறது. அனால் தற்போது இந்த எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்பது தான் வருத்தத்திற்குரியதாகும். இது போன்ற விடயங்கள் யுவதிகளுக்கு ஏற்படும் வேறு நெருக்கடியினால் வரக்கூடிய விளைவாகவும் இருக்கலாம். உதாரணமாக நண்பர்களினால் வரக்கூடிய நெருக்கடி, ஓமோன் சுரத்தல், மற்றும் காதலை வெளிப்படுத்தத் தெரியாமல் தவறான முறையில் பாலியல் உறவில் ஈடுபடுதல் என்பன எடுத்துக்காட்டத்தக்கவை ஆகும். இவர்களுக்கு நாம் எமது அனுதாபங்களைக் காட்டுவதா; இல்லையேல் பச்சாதாபப்படுவதா?

பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு கடினமாக உழைக்கும் பெற்றோர் அவர்களுடைய மகனைத் தனிமையில் தள்ளுவதனால், தனிக்கென ஒரு அடையாளத்தைத் தேடிக்கொள்வதற்குத் தவறான சகவாசங்களை, அதாவது, "அழிவினவை நீக்கு ஆறுய்த்து அழிவின்கண் அல்லல் உழைப்பதாம் நட்பு" எனும் திருவள்ளுவரின் அறிவுரைக்கு எதிர் மாறான நட்பைப் பூண்டு, கஞ்சா மற்றும் மது அருந்துதல் போன்ற பழக்கங்களிலிருந்து விடுபட முடியாமல் வாழ்க்கையை மறியற் சாலைக்குள் முடித்துக்கொள்ளும் சூழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இவ்வாறான நிலமையில் தவறு என்று தெரிந்தும் ஏன் நாம் இது போன்ற செயல்களை மேற்கொள்கின்றோம்? சரியான பாதையைப் பற்றி போதிக்கப் பெரியோர் இல்லையா? அல்லது புத்தகங்கள் இல்லையா?

செல்வத்தில் உயர்ந்தது கல்விச் செல்வம் என்பார்கள். அனால் அச்செல்வமானது இன்றைய அவுஸ்திரேலியா வாழ் தமிழ்ச் சமூகங்களில் மாணவர்களுக்கு ஒரு

இடையூறாக இருக்கின்றது. ஏனெனில் சான்றோர் அனைவரும் ஒரு மனிதனின் குணத்தை விட, அவருக்குக் கிடைக்கும் பெறுபேறையே பெரிதாகக் கருதுகின்றார்கள். பன்னிரெண்டாம் வகுப்புப் பரீட்சைக்கு மாணவர்கள் பெறும் புள்ளிகள் இங்கு ஒரு தனி அரசியலாகவே இருக்கின்றது. இந்த அரசியலில், சான்றோரின் கதைகளைக் கேட்க அச்சப்படுவது தற்கொலை முயற்சிக்கு ஏதுவாய் அமைகின்றது. மற்றவர் இதைப் பார்த்து, சிறிய விடயத்துக்காக தற்கொலையா என்று கேலி செய்யலாம் . ஆனால், எமது உயிர்ப் பலியைத் துச்சமாக நினைத்துக்கொள்பவர்களுக்கு எமது நிலையில் இருந்து பார்த்தால் தான் அந்த வலி புரியும். இல்லையேல் அதுவும் அவர்கள் பேசும் ஊர்க் கதைகளில் ஒன்றாகிவிடும் என்பதே உண்மை.

ஒரு சக்கரத்தில் சுழலாத பாகத்தையே நாம் மரபு என்று அழைக்கின்றோம். அதாவது, காலச் சக்கரம் சுழல, மாற்றம் அடையாதது மரபு ஒன்றே ஆகும். பெண்களுக்குரிய நாற்குணங்களான அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பனவற்றை அறியாமல் இருக்கும் மங்கைகள் தவறான பாதையில் செல்வதுடன் அதற்கான பிரதிபலனையும் பெறுகின்றார்கள். பல சந்தர்ப்பங்களில் இவர்கள் செய்யும் செயலுக்கான பிரதிபலன் ஆபத்து எனும் ரூபத்தில் தான் முடியும் என்பதை உணர்கின்றார்களில்லை. அதுவும், ஒரு ஆணுக்கு அசிங்கம் என்றால் அது அவனுடனேயே செல்லும். அனால் ஒரு பெண்ணுக்கு அவலம் ஏற்பட்டால் அது அக்குடும்பத்தையே பாதிக்கும். ஆகையால் ஒரு குடும்பமே தலை குனியும் நிலை ஏற்படும்.

இது போன்ற பிரச்சனைகளைத் தவிர்ப்பது பெற்றோரின் வளர்ப்பிலேயே தங்கியுள்ளது. "தாயைப் போல பிள்ளை; நூலைப் போல சேலை" என்னும் பழமொழிக்கமைய பெற்றோர் ஒழுக்கத்தைப் பேணினால் அவர்களைப் பார்த்து வளரும் இளைஞர்களும் அவர்களின் வழி செல்வர் என்பது உண்மை. அத்துடன் கல்வி நிறுவனங்களும் நல்வழிகளைப் போதிப்பதுடன் அறம், ஒழுக்கம், கட்டுப்பாடு போன்றவற்றையும் வலியுறுத்துகின்றன. மேலும் மனோதத்துவ உதவியை நாடுவதற்கு இளைஞர்களுக்குரிய மனோதத்துவவியலாளர்களும் இருக்கின்றார்கள். ஒரு மனிதனின் வாசிப்பு, அவனுடைய அடையாளத்தைப் பூர்த்தி செய்வதுடன் நடத்தையையும் சரி செய்கின்றது. ஆதலால், வாலிபர்களான நாங்கள், வாசிப்புத் திறனை அதிகரிப்பதால் வாழ்க்கையைப் புதிய கோணங்களில் இருந்து பார்ப்பதுடன் நற்பழக்கங்களையும் கற்றுக்கொள்ளலாம்.

புறக் காரணிகளால் இளைஞர்களாகிய நாம், இளம் வயதிலேயே தவறான முடிவுகளை மேற்கொண்டு வாழ்க்கையைத் தொலைத்து நிற்கும் அவலம் நாள்தோறும் அதிகரித்து வருகின்றது என்பது எம் தமிழ் சமுதாயத்துக்குப் பெரும் அவமானத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆபாசமான உடைகளை அணிந்து எமது தமிழ்க் கலாசாரக் கட்டுப்பாட்டிலிருந்து விலகி நிற்கும் எம் குலப் பெண்கள் எப்போது பாரதியாரின் புதுமைப் பெண் பற்றிய கனவை

நனவாக்கப்போகின்றனர்? இன்றைய காலகட்டத்தில் வாலிபர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளுக்கான தீர்வுகளைத் தீவிரமாக ஆராய்ந்து கொண்டு வந்தாலும் எதிர் காலத்தில் இவை எந்த அளவுக்கு சாத்தியப்படும் என்பதும் கேள்விக்குரியதே. இந்நிலையில் எத்திசை நோக்கிச் செல்லப்போகின்றோம்...

## தொலைத்தொடர்பு சாதனங்களும் நாமும்..

-ஹரிஜன் பசுபதிதாசன்-

தொலைத்தொடர்பு சாதனங்கள் இன்றைய நவீன உலகத்திற்கு பல பயன்கள் தருகிறது. ஆனால் தொலைத்தொடர்பு சாதனங்கள் சில நேரங்களில் தவறான முறையில் பாவித்தால் நமக்கு தீமைகளும் ஏற்படுத்தும்.

தொலைத்தொடர்பு சாதனங்களை பாவித்து நாம் தொலைவில் வாழும் உறவினர்கள் அல்லது நண்பர்களுடன் தொடர்பு கொள்ள முடியும். அதாவது தொலைபேசி, மின்னஞ்சல் மற்றும் இன்னும் பல தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலம் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளலாம். இதைப்போல் இந்த உலகத்தில் நடக்கும் சம்பவங்களை குறைவான நேரத்தில் அறியலாம். உதாரணமாக தொலைக்காட்சி, வானொலி மற்றும் இணையம் எந்பவற்றின் மூலம் சம்பவங்களை அறியலாம். நமக்குத் தெரியாத மற்றும் அறியாத பல விடையங்கள் உளன. ஆனால், இணையத் தளம் மூலம் இவை அறியலாம். இந்த பயன்கள் ஒவ்வொன்றும் சிறுவர்களும் பெரியோர்களும் அடையலாம். படிப்பிற்கும் வேலைக்கும் மற்றும் பொழுது போக்குக்கு தொலைத்தொடர்பு சாதனங்களை பாவிக்க முடியும். ஆனால் இவ்வளவு பயன் தரும் தொலைத்தொடர்பு சாதனங்கள் நமக்கு தீமைகளும் ஏற்படுத்துகின்றன. தொலைத்தொடர்பு சாதனங்களால் நமது உடல் நலம் பாதிக்கப்படுகிறது. அதாவது நாம் தொலைக்காட்சி கூட நேரம் பார்த்தால் நமது கண்கள் பாதிக்கப்படுகின்றன.

கைத்தொலைபேசியில் கூடிய நேரம் கதைத்தால் அதில் வரும் கதிர் வீச்சு நமது மூளையைப் பாதிக்கும். படிக்கும் சிறுவர்கள் தொலைத்தொடர்பு சாதனங்களை கூட நேரம் பாவித்தால் படிப்பில் அக்கறையும் கவனமும் குறைந்துவிடும். இதைப்போல் இளைஞர்கள் இணையம் மூலம் கெட்டவர்களோடு பழகலாம். சிலர் சொல் பேச்சு கேட்காமல் திமிர் காட்டுவார்கள். நாம் எல்லோரும் தொலைத்தொடர்பு சாதனங்களை நம்ப, நமது சுய சிந்தனையையும் இழந்துவிடுகிறோம்.

முடிவாக, நான் கூற ஆசைப்படுவது நாங்கள் தொலைத்தொடர்பு சாதனங்களை தப்பான முறையில் பாவித்தால் நமக்கு தீமைகளும் மற்றும் பிரச்சனைகளும் ஏற்படும். ஆனால் நாம் தொலைத்தொடர்பு சாதனங்களை கட்டுப்பாடான மற்றும் சரியான முறையில் பாவித்தால் நாம் எல்லோரும் நன்மைகள் அடையலாம்.

# *2004ல் இருந்து 2016 வரை...*

-க. மணிவண்ணன்-

**2004ம் ஆண்டு**

"திருச்சிற்றம்பலம்"

பூஜை அறையில் இருந்து சிறாப்பர் சிவப்பிரகாசம் வெளியே வரவும் தரகர் தணிகாசலம் உள்ளே வரவும் சரியாக இருந்தது.

"வாரும் தணிகாசலம். ஏதாவது முற்றாகி வருகுதோ. ஆ..முதலில என்ன குடிக்கிறீர்"

"ரீயைத் தவிர வேற என்னத்த நான் குடிக்கிறனான். சீனியைக் கொஞ்சம் குறைச்சுப் போடச் சொல்லும்".

"கேட்டியே பவளம். எனக்கும் சேர்த்து ஒன்றைப் போடும்"

சிவப்பிரகாசம் பவளராணி தம்பதிகளுக்கு இரண்டு பிள்ளைகள். மூத்தவன் செந்தூரன் பெரதேனியாவில இன்ஜினியரிங் முடித்துவிட்டு கொழுத்த சீதனமும் வாங்கிக் கல்யாணம் முடிச்சுக்கொண்டு கனடாவில் போய் செட்டில் ஆயிட்டான். சிவப்பிரகாசத்தாருக்கு தலை கால் புரியாத பெருமை. இந்த நாட்டில சண்டைக்குள்ளேயும் சச்சரவுகளுக்குள்ளேயும் சீரழியாம செந்தூரன் வெளிநாட்டுக்குப் போனது போல மகள் யாழினியையும் ஒரு நல்ல இடத்தில கட்டிக் கொடுத்திட வேணும் என்று தான் அவருடைய பால்ய சிநேகிதர் தணிகாசலத்துடன் அடிக்கடி சந்திப்பு. சமாதானம் எவ்வளவு காலத்துக்கு நிலைக்கும் என்று சொல்ல முடியாது. இரண்டு பக்கமும் முறுகிக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

யாழினிக்கு பங்குனி வந்தா இருபத்திரண்டு வயசு தொடங்குது. யாழ் பல்கலைக்கழக மானேஜ்மெண்ட் இறுதி ஆண்டு. இப்ப பார்க்க தொடங்கினால் தான் இரண்டு மூன்று வருடத்திற்குள் முடித்து விடலாம். ஏ to இசட் கிரைடேரியாவை வைத்துக்கொண்டு வரன் தேடுவதற்குள்ளே அமெரிக்காவில் மூன்று தடவை ஆட்சி மாறிவிடும். பெடியளுக்கும் தட்டுப்பாடு.

"சிவம், நாலைந்து வரன் கையில இருக்கு. ஒண்ணு இருந்தா ஒண்ணு இல்ல. பிள்ளையின்ர படிப்புக்கு ஏற்றாற் போல கொஞ்சம் கெத்தா வேற பார்க்க வேணும். அவளும் படிப்பை முடிச்சு கொஞ்சம் வேலை செய்யத் தொடங்கட்டும். அதுக்குள்ள ஒன்றைக் கொழுவிப் போடலாம்".

**2007ம் ஆண்டு**

"தணிகை, இவள் யாழினி இலங்கை வங்கியில வேலைக்கு சேர்ந்து இரண்டு வருஷமாச்சு. மாசம் சுளையா ஒரு இலட்சம் வாங்கிறாள். நல்ல வேலை. ஒரு கிராட்ஜுவேட்டா பார்த்து முடிச்சு போடவேண்டும்".

"என்னட்ட ஒரு நல்ல வரன் இருக்குது. பெடியன் இன்ஜினியரிங் பெர்ஸ்ட் கிளாஸ் ஹொனர். மேற்படிப்புக்கு வெளிநாட்டு ஸ்கொலர்ஷிப் கிடைக்க வாய்ப்பிருக்கு. அப்பா ரிடையர்ட் சேவயர். ஒரு அக்காவும்

அண்ணாவும் கல்யாணம் கட்டிப் போட்டினம். இவன் தான் கடைசி. ஒரு பிக்கல் பிடுங்கல் இல்லாத குடும்பம்"

"எங்கட சாதியே?"

"அதெல்லாம் விசாரிச்சிட்டன். உங்கட முதலாவது கிரைட்டேரியாவே சைவ உயர் குல வேளாளராக இருக்க வேண்டும் என்பது தானே. உரும்பராயில இருந்து இடம் பெயர்ந்து இப்ப கொக்குவில் குளப்பிட்டி லேனில இருக்கினம். பெடியன நல்லூர் திருவிழாவில பார்த்தனான். நல்ல உயரமா ஸ்மார்டா இருக்கிறான்."

"பிறகென்ன பேசி முடிச்சிட வேண்டியது தானே".

"சிவம், ஒரேயொரு சின்ன சிக்கல். சிக்கல் என்று பார்த்தால் தான் சிக்கல். 2007ம் ஆண்டில இருக்கிறம். உலகம் எங்கேயோ போய்க்கொண்டிருக்கு. சின்ன வயசில இருந்து ஒண்ணாப் படிச்சவங்கள் என்டதால ஒன்றையும் மறைச்சு செய்து வைக்க விருப்பமில்ல. பிறகு அது எங்கட இரண்டு குடும்பதிற்குள்ளேயும் விரிசல கொண்டு வந்திடக்கூடாது."

"என்ன தணிகை அண்ண, பீடிகை பலமாப் போடுறியள். அப்படி என்ன தான் விஷயம்".

"இல்ல தங்கச்சி. ஒரு பதினைஞ்சு வருஷத்திற்கு முன்னால பெடியன்ர அம்மாவிட தம்பிக்காரன் ஒரு பெட்டைய விரும்பி அவளோட ஓடிப்போயிட்டான். அவள் கொஞ்சம் குறைஞ்ச சாதி. இப்ப காலங்கள் ஓடிப்போச்சு. இத எல்லாம் சனங்கள் மறந்திருப்பினம்".

"இஞ்ச பாரும் தணிகை. மறந்த விஷயம் என்று எப்படிச் சொல்லுவீர். யாரோ அத உமக்கு சொல்லித் தானே இருக்கினம். நல்லூர் வீதியில இறங்கி இந்த சிவப்பிரகாசம் நடந்தால் அவனவன் கையெடுத்துக் கும்பிடுவான். இப்படி ஒரு குடும்பத்திற்குள்ள எங்கட மகள் போனாள் என்று தெரிஞ்சால் சொந்தக்காரன் ஒருத்தனும் பந்தியில கை நனைக்க மாட்டான். மகளுக்கு இப்ப தானே இருபத்தஞ்சு நடக்குது. வேற நல்ல சம்பந்தம் இருந்தால் பாரும்".

"சரி சரி. இந்த சம்பந்தத்தை இப்படியே மறந்து விடுவோம். வேற ஏதும் வந்தால் சொல்லுறன்".

## 2009ம் ஆண்டு

"அப்பா, அடிபாடு தொடங்கிட்டுது. இந்த நாடு இனி சரிப்பட்டு வராது. என்னோட படிச்ச பிரண்ட்ஸ் ஒஸ்ரேலியாவில கோர்ஸ் செய்ய என்று போய் சில பேர் பிஆரும் எடுத்திட்டினம். அங்க கேஸ் எழுதிக் குடுத்து பி ஆர் வாங்கித் தர சில லோயர்ஸ் இருக்கினமாம். சில பேருக்கு இதுதான் முழுநேர வேலையாம். நேற்றுத் தான் வத்ஸலா சொன்னவள். அவளுக்கும் பி ஆர் கிடைச்சிட்டுது. ஏழு மாதம் தான் பிடிச்சதாம்".

"என்ன பிள்ள இப்படிச் சொல்லுறாய். அண்ணன் கனடாவில நீ அவுஸ்திரேலியாவில எண்டால் நானும் அப்பாவும் மட்டும் ஒருத்தர ஒருத்தர் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியது தான். கலியாணமும் ஒண்டும் சரிப்பட்டு வர்ற மாதிரித் தெரிய இல்ல ".

"என்ன அம்மா எனக்குப் பி ஆர் கிடைச்ச உடன உங்களை இங்க தவிக்க

விட்டுப்போட்டு நான் தனிய அங்க சந்தோசமாகவா இருக்கப் போறன். எனக்குப் பி ஆர் கிடைச்ச உடனே முதல் வேலையா உங்கள் இரண்டு பேரையும் அங்க தானே எடுக்கப் போறேன். அங்கேயும் படிச்ச மாப்பிள்ளைகள் இருப்பினம் தானே. என்ட தலையில அங்க தான் கல்யாணம் எண்டு எழுதியிருந்தால் அத மாத்த முடியுமே".

"பவளம், எனக்கெண்டால் மகள் சொல்றது சரியெண்டு தான் படுது. டோஃபிலிலயும் நல்ல மார்க்ஸ் எடுத்திருக்கிறாள். அவள் சொல்லுற மாதிரி ட்ரை பண்ணிப் பார்க்கட்டும்".

**2012ம் ஆண்டு**

"என்ன அப்பா, சிட்னி வெதர் ஒத்துக்கொள்ளுதா"?

"நல்ல ஜம்பரைப் போட்டால் அது ஒண்ணும் பெரிய பிரச்சினை இல்ல பிள்ள. எங்கட கவலையெல்லாம் எங்கட காலத்திற்குள்ள உன்னை ஒரு நல்ல இடத்தில கட்டிக் கொடுத்து விட வேணும் எண்டது தான். நானும் அம்மாவும் சீனியர் சிற்றிஸன் மீட்டிங்குகளில காணுற பிரண்ட்ஸிட்ட எல்லாம் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறம். வயதும் முப்பது ஆக சொய்ஸும் குறைஞ்சு போகுது".

**2016ம் ஆண்டு மார்ச் மாதம்**

"டோன்ற் வொறி மிஸ்டர் சிவப்பிரகாசம், இஞ்ச சின்ன வயசுகளில வந்த பிள்ளைகளில பல பேர் இப்ப வேற நாட்டு ஆட்களைத் தான் கட்டியிருக்கினம். முந்தநாள் ராஜரெட்ணத்தின்ர பெடியன் ஒரு தாய்லாந்து பெட்டையைக் கட்டின கல்யாணத்திற்கு தானே எல்லாரும் போய் வந்தனாங்கள். இப்ப எல்லாம் பிள்ளைகள் கம்பஸுக்கு படிக்கப் போகேக்குள்ளேயே யாரையாவது பார்த்து பிடிச்சுப் போடுங்கோ எண்டு தான் பேரண்ட்ஸ் சொல்லி அனுப்புகினம். நானும் பிள்ளைகளை வச்சிருக்கிறனான். கண்ணாடி வீட்டுக்குள்ள இருந்து கல்லெறியக் கூடாது பாருங்கோ. எல்லாத்திற்கும் தயாராகத் தான் இருக்க வேணும்."

"நீங்க சொல்லுறது ஒரு விதத்தில சரிதான் மிஸ்டர் நந்தகோபன். பவளத்தால தான் ஜீரணிக்க முடிய இல்லை. ஊரில எவ்வளவு நல்ல சம்பந்தங்கள் வந்தது. சின்ன சின்னப் பிரச்சினைகளைக் காட்டி எங்கட திமிரில தட்டிப் போட்டு இப்ப அனுபவிக்கிறம். அட இந்த நாட்டில மானேஜ்மெண்ட் கோர்ஸ் செய்யப் போனவள் ஆராவது எங்கட சிறீலங்கன் பெடியனைக் கூட்டி வந்திருந்தால் பரவாயில்லை. யாரோ வியட்னாமியனை அல்லவா கட்டப் போறனெண்டு நிற்கிறாள். ஆனாலும் குறை சொல்லக்கூடாது பாருங்கோ பெடியன் நல்ல காண்ட்சம். ஸ்கொலர்ஷிப்பில வந்து பி ஹெச் டி முடிச்சவனாம். ஃபாதரும் ஏதோ பிஸினஸ் மக்னட்டாம் என்று தான் கேள்வி."

"பிறகென்ன யோசனை. முடிச்சு விடுங்கோ. அதுகளிண்ட லைஃப். அவையளே பார்த்துக் கொள்ளுவினம். இரண்டு பேருமே எஜுகேற்றற்."

"முருகன் கோயிலில இந்து முறைப்படி தான் கல்யாணம். கார்ட் அனுப்புறம். குடும்பத்தோட வந்திடுங்கோ".

**2016ம் ஆண்டு நவம்பர் மாதம்**

"அப்பா, இவர் லோஙு் உங்களிட்ட ஏதோ இன்போர்மேஷன் பாஸ் பண்ண வேண்டும் எண்டு சொன்னார். அவரின்ட பேரண்ட்ஸ் லோங் ஸ்டேயிங் விசா கிடைத்து வருகினமாம்."

"அங்கிள், எப்பிடி சுகம். Am i pronouncing correctly?"

"Fine, my son. You will learn Tamil from Yalini soon. What's up?"

"Uncle, my parents got long staying visa for five years to come and stay over here with me. My father couldn't attend our wedding ceremony as he couldn't get the visa at the last minute. Now both got visa and soon they will be here."

"That's really a good news".

"Yes uncle, I am so glad. My dad is looking for an opportunity to run his business here too. He had five shops back in hometown and about 80 employees are working for him. I rented a place near Homebush train station to start up his business".

"Yeah, you mentioned before that he is a business man. What sort of business is he running?"

"Barber shop, uncle"

நல்லூர் வீதியில் நெஞ்சை நிமிர்த்தி நடந்த சிவப்பிரகாசம் உடல் குறுகி பூஜை அறைக்குள் நுழைகிறார்.

"திருச்சிற்றம்பலம்"

---

*இளவேனில் சஞ்சிகைக்கான ஆக்கங்களை*
*அனுப்பி வைக்க வேண்டிய முகவரி :*

Casey Tamil Manram

PO Box 2516,

Fountain Gate,

Vic 3805

**மின்னஞ்சல்:** editor@caseytamilmanram.org.au

# அப்பம்மா

எனது அப்பம்மாவின்
பெயர் கமலம்.
அவருடன் நான் தமிழ்
படிக்கிறேன்.
எனக்கு அவரை
மிகவும் விருப்பம்.

அர்ச்சனா



## எதிர்காலத்தில்....

-சமுத்திரா. ப-

நவராத்திரி காலத்தில் எனக்கு பிடித்த நாள் சரஸ்வதி பூஜை நாளே. உங்களுக்குத் தெரியும் ஏன் என்று. அன்று அம்மா கடலை, அவல், மோதகம் எல்லாம் செய்து கடவுளுக்குப் படைப்பார். நாங்களும் எங்கள் பாடப் புத்தகங்களை எல்லாம் சரஸ்வதிக்கு முன் வைத்து தேவாரம் பாடி, எமக்கு நல்ல அறிவைத் தரவேண்டும் என்று சரஸ்வதியிடம் வேண்டுவோம். பின் அந்தப் பலகாரங்களை உண்பது எனக்கு மிகவும் பிடிக்கும்.

முன்பெல்லாம், நாம் சிறு பிள்ளைகளாக இருக்கும்போது எனது அக்கா, அண்ணா மற்றும் எனது புத்தகங்கள் எல்லாம் சேர்த்தாலே ஒரு பத்து புத்தகங்கள்கூட வராது. நான் எனது புத்தகங்களை எல்லோருடைய புத்தகங்களுக்கு மேல் வைப்பேன். ஏனென்றால் சரஸ்வதி எனது புத்தகங்களை முதலில் ஆசீர்வதிப்பா என்றொரு நம்பிக்கை. இப்போதெல்லாம் எமது புத்தகங்களை அடுக்கினால் ஒரு கோபுரமே கட்டலாம். அதனால் பக்கம் பக்கமாக வைப்போம்.

வழக்கம் போல் இம்முறையும் அம்மா எங்களை குளித்துவிட்டு பாடப் புத்தகங்களை பூஜைக்கு எடுத்து வைக்கச் சொன்னா. அம்மா, தான் செய்த பலகாரங்களை எல்லாம் எடுத்து வைத்தபோதுதான் கவனித்தா, அண்ணாவின் புத்தகங்கள் அங்கு இல்லாத்தை.

''என்ன தம்பி, ஏன் புத்தகங்களை எடுத்து வைக்கவில்லை?'' என்று அம்மா கேட்டார். ''அம்மா, நான் ipadஐ எடுத்து வைத்திருக்கிறேன். அதில்தான் எனது புத்தகங்கள் எல்லாம் இருக்கிறது'' என்றார் அண்ணா.

பாவம் அம்மா, காலம் மாறிக்கொண்டு போகிறதை ஏற்றுக்கொள்ளத்தானே வேண்டும். எதிர் காலத்தில், சரஸ்வதி பூஜைக்கு புத்தகங்களுக்குப் பதிலாக ipadஉம் laptopஉம் memory stickகும் தான் இருக்கும் என்பது உண்மைதான்.

## மிட்சேல் ஸ்டார்க்

-ஜனகன் சிவா-

- மிட்சேல் ஸ்டார்க் ஒரு அவுஸ்திரேலியா பந்து வீச்சாளர்.
- இவர் சிட்னியில் பிறந்தார்.
- இவருடைய சகோதரன் பிறன்டன் ஸ்டார்க்.
- இவருடைய வயது இருபத்தி ஆறு.
- இவருடைய கிரிக்கட் கிளப் விளையாட்டுகள் 2012ல் தொடங்கியது.
- இவருடைய மனைவியும் கிரிக்கட் விளையாடுவார்.

## முகப் புத்தகம் (*Facebook*)

*-அபிராமி கிரிதரன்-*

இன்றைய உலகத்தில் முகப் புத்தகம் பிரசித்தி அடைந்துள்ளது. இரண்டாயிரத்தி நாலாம் ஆண்டளவில் உருவாக்கப்பட்ட முகப் புத்தகத்தை 1.8 பில்லியன் மக்கள் இன்று பயன்படுத்துகிறார்கள்.

முகப் புத்தகத்தை உருவாக்கினவர் அமெரிக்காவைச் சேர்ந்த மார்க் ஜுக்கபெர்க். ஜுக்கபெர்க் தனது நண்பர்களோடு சேர்ந்து அமைத்த முகப் புத்தகம் ஆரம்பத்தில் ஒரு விளையாட்டாகத் தொடங்கியது. சில நாட்களுக்குப் பிறகு அவர் படித்த ஹாவர்ட் பல்கலைக்கழகத்தில் இருந்த மாணவர்கள் எல்லோரும் முகப் புத்தகத்தை பாவிக்க ஆரம்பித்தார்கள். இப்படி சின்னதாக ஆரம்பித்த கண்டுபிடிப்பு இன்று மிகவும் பிரபலமாகிவிட்டது.

முகப் புத்தகத்தில் பல நன்மைகள் இருக்கிறது. வெகு தூரத்தில் இருக்கும் உறவினர் மற்றும் நண்பர்களோடு தொடர்பு கொள்ளலாம். முதலாளிகள் தங்களது வியாபார விளம்பரங்களை முகப் புத்தகத்தின் ஊடாக விளம்பரப் படுத்துகிறார்கள். முகப் புத்தகத்தின் மிகவும் பெரிய நன்மை இன்னோர் இடத்தில் நடக்கும் செய்திகள், விருந்துபசாரம், பிறந்தநாள் வைபவம் மற்றும் திருமணக் கொண்டாட்டம் போன்ற நிகழ்ச்சிகளை அறியலாம்.

ஆனால், முகப்புத்தகத்தில் சில தீமைகளும் இருக்கிறது. அதிக நேரம் முகப் புத்தகத்தை பாவிப்பதால் கண் பார்வை குறைய வாய்ப்புகள் இருக்கிறது. முகப் புத்தகத்தால் ஒருவர் இன்னொருவரின் முக்கிய விவரங்களை பெறலாம். இந்த தீமைகளை தவிர்க்க முகப் புத்தகத்தை பொறுப்பாக பாவிக்க வோண்டும்.

முகப் புத்தகம் உலகத்தில் பல மக்களுக்கு மிகவும் பிடித்த கண்டுபிடிப்பு.

## கூடைப்பந்து...

*-ஜனகன் சிவா-*

கூடைப்பந்து உலகம் முழுவதும் விரும்பி விளையாடும் விளையாட்டு. கூடைப்பந்து கனடாவில் முதன்முதலாக விளையாட ஆரம்பிக்கப்பட்டது.

ஒரு கூடைப்பந்து விளையாட்டில் இரண்டு அணிகள் இருக்கின்றது. ஒவ்வொரு அணியிலும் ஐந்து விளையாட்டுவீரர்கள் இருக்கின்றனர். ஒவ்வொரு விளையாட்டிலும் நான்கு பகுதிகள் இருக்கின்றது. ஒவ்வொரு பகுதியும் பன்னிரண்டு நிமிடங்கள் கொண்டுள்ளது. இந்த விளையாட்டில் எனக்கு பிடித்த பிரபல்யமான வீரர்கள் பற்றிய சில குறிப்புக்கள்:–

**மைக்கைல் ஜோர்டான்:** மைக்கேல் ஜோர்டான் ஒரு பிரபலமான கூடைப்பந்து விளையாட்டு வீரர். அவர் அமெரிக்காவைச் சேர்ந்தவர். மைக்கேல் ஜோர்டான் சிகாகோ புல்ஸ் அணிக்கு விளையாடினார். மைக்கேல் ஜோர்டான் 2003 ஆண்டில் ஓய்வு பெற்றார்.

**லெப்ரோன் ஜேம்ஸ்:** லெப்ரோன் ஜேம்ஸ் கிளீவ்லன்ட் கேவலியர்ஸ் அணிக்கு விளையாடுகிறார். லெப்ரோன் ஜேம்ஸ் மியாமி ஹீட் அணிக்கு விளையாடினார். இவரும் அமெரிக்காவைச் சேர்ந்தவர். இவர் ஒரு பிரபலமான கூடைப்பந்து விளையாட்டு வீரன்.

கூடைப்பந்து ஒரு வேடிக்கையான விளையாட்டு. கூடைப்பந்து சிறுவர்களால் உலகம் முழுவதும் விரும்பி விளையாடும் விளையாட்டு.

## தெரிந்து கொள்ளலாம் வாங்க...

1. கந்தரலங்காரம் பாடியவர் யார்?
2. திருமுருகாற்றுப்படை இயற்றியவர்
3. சம்பந்தர் உயிர்ப்பித்த பெண்ணின் பெயர்
4. ஜடாயுவின் சகோதரனின் பெயர் என்ன?
5. மஹாபாரதத்தில் பாண்டவர்களுக்கு அட்ஷய பாத்திரம் அளித்தவர் யார்?
6. சிதம்பரம் நடராஜர் தல புராணம் எழுதியவர் யார்?
7. சூரிய பகவானின் மாமனார் பெயர் என்ன?
8. முருகப் பெருமானின் ஆறுபடை வீடுகளில் ஒரு படை வீட்டில் ''சூரசம்ஹாரம்'' நடைபெறுவதில்லை. அது எந்த படை வீடு?
9. மஹாபாரதத்தில் ''வாளியில்'' பிறந்தவர் யார்?
10. சண்டிகேஸ்வரர் முக்தி பெற்ற தலம் எது?
11. கிருஷ்ணனின் குருவின் பெயர் என்ன?
12. நந்தி இல்லாத சிவன் கோயில் எது?
13. பட்டினத்தாரின் இயற்பெயர் என்ன?
14. யாக குண்டத்தை சுற்றிப் போடப்படும் கோலத்தின் பெயர் என்ன?
15. இந்து மதத்தின் முழுமுதற் கடவுளாக பிள்ளையாரை மாற்றியவர்கள் யார்?

**பதில்**

1) அருணகிரிநாதர்.
2) நக்கீரர்.
3) பூம்பாவை.
4) சம்பாதி
5) சூரியன்
6) பதஞ்சலி வியாக்ரபாதர்.
7) விஷ்வகர்மா.
8) திருத்தணி.
9) துரோணர்.
10) திரு ஆய்ப்பாடி – கும்பகோணம் அருகில்.
11) சண்டிபாணி.
12) கோனேரி ராஜபுரம். (திரு நல்லம்)
13) திருவெண்காடார்.
14) மேகலை.
15) குப்தர்கள்.

# கேசி தமிழ் மன்றத்தின் மூத்தோர்கள் ஒன்றுகூடல்...

-நவா ஐயா-

புலம் பெயர்ந்தாலும் தாய் மொழியாம் தமிழன்னைக்கு வலுசேர்த்து தங்களுடன் நம் இனிய தமிழ் மறைந்துவிடாது எதிர்காலத்திலும் மென்மேலும் செழித்து வளர வேண்டும், அதற்கு முதற்கட்டமாக இளைய தலைமுறையினரிடம் மொழியைக் கொண்டு செல்லவேண்டும், அதன் ஆரம்ப கட்டமாக தம் வீட்டுக்குழந்தை என்றில்லாமல் அடுத்துள்ள தம் மொழிசார்ந்த நண்பர்கள் வீட்டுக்குழந்தைகளையும் ஒன்று சேர்த்து அனைவருக்கும் நம் கலை, கலாச்சாரம், மற்றும் தமிழர் திருநாட்களை அறிமுகப்படுத்த வேண்டும் என்ற வேட்கையினால் தமிழ் இளைஞர்களினால் உருவாக்கப்பட்டதுதான் கேசி தமிழ் மன்றம். இளைய தலைமுறை யினரோடு மாத்திரம் நின்றுவிடாது புலம் பெயர்ந்ததனால், வீடுகளுக்குள்ளே அடைபட்டு புலத்தில் வாழ்ந்த வாழ்க்கையை அசைபோட்டு மனச்சஞ்சலத்துடன் வந்த இடத்தின் தாங்கமுடியாத குளிரையும் சகித்துக்கொண்டு மதில்போல் பூனைபோல அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் முதியவர்களையும், அவர்களுடைய தனிமையைப்போக்கி, அவர்களை வந்து குடியேறிய இடத்திலும் மகிழ்ச்சியாக, அதே சமயத்தில் ஊருடன் இணைந்து வாழவைக்கவேண்டும் என்ற சமுதாய நோக்குடன் முதியவர்களுக்காக தமிழ் மூத்த பிரஜைகள் ஒன்று கூடல் என்ற பெயரில் ஒரு அமைப்பை உண்டாக்கி, மாதந்தோறும் நாலாவது சனிக்கிழமைகளில் அவர்கள் சந்திப்பதற்கு ஏற்றவிதமாக ஒரு இடத்தையும் ஒழுங்கு செய்து கொடுத்தார்கள்.

அந்தவிதமாக உருவாக்கப்பட்ட கேசி தமிழ் மன்றம் மூத்தோர் ஒன்று கூடல் நிகழ்வானது கடந்த ஒன்பது மாதங்களுக்கு மேலாக தற்போது 35 பெண்களையும் 20க்கு மேற்பட்ட ஆண்களையும் அங்கத்தவர்களாகக் கொண்டு நல்ல முறையிலே மாதத்துக்கு ஒருநாளாக முற்றிலும் முதியவர்களினால் முறையான கட்டமைப்புடன் நடந்து வருகின்றது. அங்கத்தவர்கள் டண்டினங், எண்டவர்ஹில், பெரிக், ஹம்டன் பார்க், க்ரான் பேர்ன் போன்ற இடங்களைச்சேர்ந்தவர்களாக இருந்தாலும்கூட, கூட்டம் பெரிக் என்னும் இடத்தில் அங்கிருக்கும் ஆங்கிலேயர் மூத்தோர் மண்டபத்தில்தான் நடந்து வருகின்றது. தூர இடங்களிலிருந்து வருகைதரும் அங்கத்தவர்களுக்கு, அதிலும் பிரயாண வசதி தேவைப்படுவோருக்கு இலவசமாக பிரயாணவசதியும் செய்து கொடுத்து, அவர்களை அவரவர் வீடுகளுக்கே சென்று அழைத்துவருவதும், கூட்டம் முடிந்தவுடன் அவர்களை மிகவும் பொறுப்புடன் அவரவர் வீடுகளில் கொண்டு சேர்ப்பதும் குறப்பிடத்தக்கதே. இவற்றுக்கான செலவுகளையும் கேசி தமிழ் மன்றம் ஏற்றுச்செய்து வருவதையும்

கூறத்தான் வேண்டும். கூட்டம் நடக்கும் நாட்களில் அங்கத்தவர்களுக்குரிய மதிய உணவுக்காக , அவர்களிடம் ஐந்து வெள்ளிகள் பெற்றுக்கொண்டு தரமான உணவு அவர்களுக்கு வழங்கப்படுகின்றது.வெளியிலே அதிக விலை கொடுத்து வாங்கினாலும் மேலதிகமாகவரும் செலவையும் கேசி தமிழ் மன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது. காலையில் வந்து சேரும் அங்கத்தவர்களுக்கு அவர்கள் களை தீர்க்கும் விதமாக தேனீர், காப்பி, பிஸ்கட் இலவசமாக தேவையான அளவு அவர்களே எடுத்துக்கொள்ளும் விதமாக வாசலில் ஒருபுறத்தே வைத்திருப்பார்கள். தேவையானவர்கள் விரும்பியபோது எடுத்துக்கொள்வார்கள். தவிர அந்த மாதம் பிறந்தநாளுக்குரியவர்களுக்காக கேக்வெட்டி பிறந்தநாட் கொண்டாட்டமும் மாதாமாதம் ஒழுங்காக நடைபெறுவதைக்காணலாம்.

இனி நிகழ்ச்சிகளை நோக்கினால் சில நாட்களில் சுத்தம், சுகாதாரம், குறிப்பிட்ட நோய் என்பன போன்ற விடயங்களுடன் அந்தத்துறை சார்ந்த விற்பன்னர்களை அழைத்து அங்கத்தவர்களுக்கு, அவர்களைக்கொண்டு விரிவாகக்கூறவைத்து, ஆங்கில உரையானால், விளங்காத அங்கத்தவர்களுக்காக உரைபெயர்ப்பாளரையும் ஒழுங்கு செய்து அவர்கள் கூறுவதைப்புரிந்து ஏதாவது சந்தேகம் தோன்றினால் அங்கத்தவர்களே கேள்வி மூலம் தம் சந்தேகங்களையும் கேட்டு தெளிவு பெறுவார்கள்.

சிலநாட்களில் விக்டோரியா, மத்திய அரசாங்கத்தினால் முதியவர்களுக்கு வழங்கப்படும் சேவைகள், அறிவுறுத்தல்கள் பற்றிய விபரத்துடன்வரும் பேச்சாளர்களையும் அழைத்து, அவர்களுடன் வரும் உரைபெயர்ப்பாளரையும் முன்நிறுத்தி அங்கத்தவர்கள் அறிந்து கொள்ளும் விதமான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படும். இந்தவிதமாக அங்கத்தவர்களும் தாங்கள் அறிந்திராத பல விடயங்களையும் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு இதன் மூலம் கிடைத்து மகிழ்ச்சியடைகின்றார்கள்.

அங்கத்தவர்களை மகிழ்ச்சிப்படுத்தும் விதமாக பாட்டு, சங்கீதம் வாத்திய இசை, நாடகம் என அவற்றைச் செய்யக்கூடிய கலைஞர்களை, அந்தத்துறையிலே பயிலும் சிறுவர்களை அழைத்து அங்கத்தவர்கள் முன் அரங்கேற்றுவார்கள்.

எதுவுமே இல்லாத நாட்களில் தங்களுக்குள்ளே பாடக்கூடியவர்கள், ஏதாவது விடயத்தைப்பற்றி கூற விரும்புபவர்கள், தங்களுடைய அனுபவங்கள், செய்திகளை ப்பகிரத்தலைப்பட்டவர்கள் முன்வந்து அங்கத்தவர்களை அன்றைய தினம் மகிழ்ச்சிப்படுத்துவார்கள். தவிர தங்களுக்குள்ளே தீர்மானித்து நல்ல காலநிலையுள்ள காலத்தில் சுற்றுலா போன்று காலை புறப்பட்டு மாலை திரும்பும் விதமாக எங்காவது சென்று அன்றைய தினத்தை சந்தோஷமாகக் களிப்பார்கள்.

ஒன்றுகூடலின் பிரதான நோக்கமே முதியோர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒருவரையொருவர் சந்திக் கும்போது, ஒருவரோடொருவர் தங்கள் கவலைகளையெல்லாம் மறந்து மனம்


விட்டுக்கதைத்துத் தங்கள் தனிமையைப் போக்கி, வீட்டுக்குள்ளே முடங்கிக்கிடக்காமல் கலகலப்பாக புதியவர்களையும் அறிமுகப்படுத்தி நடக்கும் நிகழ்ச்சிகளினைக்கண்டு மன அழுத்தங்களிலிருந்து விடுபட்டு புலம் பெயர்ந்து வந்த இடத்திலும் ஒரு பிடிப்பை ஏற்படுத்திக் கொடுப்பதே. அந்தவகையில் இது முதியவர்களுக்கு மிகவும் ஏற்புடையதே.

புதியதாக அங்கத்தவர்கள் சேர்வதில் எவ்விதமான சிரமமும் இல்லை சேரவிரும்புபவர்கள், மற்றும் மேலதிக தகவல் பெற விரும்புவோர் கேசி தமிழ் மன்றத்தின் பொங்கல் விழா அன்று தகவல் நிலையத்தில் வந்து விபரங்களுடன், விண்ணப்பப் படிவங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

## தமிழ் ஊக்குவிப்பு போட்டி...

- அ.ஹரிஸ்-

தமிழ் ஊக்குவிப்பு போட்டியின் தேசிய மட்ட போட்டிக்கு நான் தெரிவு செய்யப்பட்டேன். இப் போட்டி சிட்னியில் நடைபெற்றுள்ளது. அதனால் நான் சிட்னி போகவேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆனால் எனக்கு மிகவும் பயமாக இருந்தது. 30. 09. 16 அதிகாலை 3மணி அளவில் எம் பயணம் தொடங்கியது. இந்த பயணத்தின்போது நான் அழகான வீதிக் காட்சிகளைக் கண்டேன். இந்தப் பயணம் சுமார் 10 மணித்தியாலங்கள் நீடித்தது. பச்சை பசேலென புல்வெளி என் கண்களைப் பறித்தது. மலைகள் பச்சைக் கம்பளத்தைப் போர்த்தியது போல் இருந்தது. சின்ன சின்ன மஞ்சள் பூக்கள் என் கண்களைக் கவர்ந்தன. பச்சைப் புல்களின் மீது ஆடு, மாடு, குதிரை போன்ற மிருகங்களைப் பார்க்க கூடியதாய் இருந்தன. பின்னர் எம் பயணம் சிறிது நேரம் தொடர்ந்தது. பிறகு நாம் ஓய்வு எடுக்க நினைத்தோம். அங்கே ஒரு சிற்றுண்டிக் கடையில் காலை உணவு சாப்பிட்டோம். எம் பயணம் நாடாளுமன்றத்தை நோக்கி ஆரம்பித்தது. சில மணி நேரத்தில் அந்த இடத்தை சென்றடைந்தோம். நாடாளுமன்றத்தில் ஒரு பெரிய மண்டபம் இருந்தது. அங்கே பிரதமர், எதிர்கட்சி தலைவர்களுக்கான ஆசனங்களைக் கண்டேன். இதன் பின்னர் எம் பயணம் சிட்னியை நோக்கி தொடங்கியது. சிட்னியில் பெரிய பெரிய கட்டடங்கள் இருந்தன. அங்கே ஒரு தங்கு விடுதியில் தங்கினோம். உள்ளே போன பின்பு அந்த விடுதி அழகாக இருந்தது. அடுத்த நாள் நான் என் தமிழ் பேச்சுப் போட்டிக்கு சென்றேன். அதன் பிறகு சில இடங்களைச் சுற்றிப் பார்த்தோம். அதன் பின்னர் வெற்றியாளர்களின் பட்டியல் வெளியிடப்பட்டது. பின்னர் நான் அதில் இரண்டாம் இடம் பெற்றேன். எனக்கு மிகவும் கவலையாக இருந்தது. ஏன் என்றால் என் இலக்கு முதலாம் இடத்தை பெறுவதே. ஆனால் நான் மீண்டும் முயற்சி செய்வேன். என் தங்கப் பதக்கத்தை நோக்கிய என் பயணம் தொடரும்.



-வந்தனா விஜயாலயன்(6)-

# நட்பு என்ற நிழலில்...

- சியாமளா யோகேஸ்வரன்-

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு"

என்று உண்மையான நட்பு எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றி உலக அருமறையாம் திருக்குறளில் மிக அழகாக வள்ளுவர் சொல்லியிருக்கிறார். பாடசாலைப் பராயத்தில் சிறுவராகக் கால் எடுத்து வைக்கும் போதே நம்மை அங்கீகரித்து நம்முடன் விளையாட நம்மை யாராவது வரமாட்டார்களா என்று மனது ஏங்கத் தொடங்கி விடுகிறது. நம்முடன் பழகும் சிறுவனையோ அல்லது சிறுமியையோ எந்த எதிர்பார்ப்புமின்றி, எந்த அடையாளமும் தேவைப்படாமலேயே ஒட்டிக் கொண்டு, உரிமை கொண்டாடத் தொடங்கி விடுகிறோம். பிஞ்சு நெஞ்சத்தில் உண்மையான அன்பை மட்டும் சுமந்து கொண்டு, கவலையற்ற பட்டாம் பூச்சிகளாகச் சிறகடித்துப் பறக்கும் அந்த நட்பில் எந்தக் கலப்படமுமிருப்பதில்லை என்பதால், அந்த நண்பர்களும் அவர்களுடனான நினைவுகளும் மீட்டிப் பார்க்கையில் இன்றும் எம் மனதில் இனிமை தருவனவாக என்றும் பசுமையாக இருப்பதை பலராலும் மறுக்க முடியாதிருக்கும். அது பாடசாலை நட்பாக மட்டுமன்றி, அயலில் ஒன்றாக விளையாடி, ஒற்றுமையாக மாங்காய் திருடி, நட்பென்றால் நாமென்று சண்டித்தனத்திற்குப் போய் வயதானவர்களின் திட்டுகளை வாங்கி, பல்கலைக்கழகப் பட்டம் பெறமுன்னரே பாட்டிமாரிடம் “தெருவின் குழப்படிச் சிங்கங்கள்” என்று வசவு வாழ்த்துக்களைப் பெற வைத்த நட்பாகவுமிருக்கக் கூடும்.

வயது சற்றே ஏற ஆணுக்கும் பெண்ணுக்கும் உலகமும், உறவுகளும் போட்ட வட்டங்கள் மாறுபட, கவலையற்று கள்ளமின்றிப் பழகிய அடுத்த வீட்டு அண்ணா உட்பட பிற ஆண்கள் அந்நியமாய்ப் போனார்கள். நட்பின் எல்லையும் நண்பர்களின் தெரிவும் பெற்றோர்களுடையானதாய் போக, சிறுவனுக்கு சிறுவனும், சிறுமிக்கு சிறுமியும் தான் நண்பர்கள் என்பது எழுதப்படாத சட்டமாயிற்று காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு என்பது போல், அத்தனை பெற்றோருக்கும் தம் குழந்தைகள் தங்கக்கட்டிகள், வாயில் விரலை வைத்தாலும் கடிக்கத் தெரியாத தமது அப்பாவிப்பிள்ளைகளை, அநியாயத்துக்கு, சக நண்பர்கள் கெடுக்கிறார்கள் என்பது அவர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை. படிக்கக் கூடிய மாணவர்களுடனான நட்பை மட்டும் ஊக்கப் படுத்தும் பெற்றோர்களின் தராசில் படிப்பு மட்டுமே எடைக்குப் போடப்பட்டு. பொறாமை, போட்டி, வன்மம் போன்ற கணிப்பீடுகள் அவர்களின் பார்வையில் எடுபடாமற் போனதாலே

பிரிந்து போன நட்பின் கதைகளையும் நாம் அறிவோம்.

இன்னமும் சற்று வளர படிப்பின் திசைகளும் தேவைகளும் மாறிப் போனதுடன், நாட்டின் சூழ்நிலையும் சிறுவர் உள்ளத்தில் பூத்த முதல் நட்பு என்ற பூவை பறித்துக் கசக்கிப் எறிந்து விட்டுப்போகக் காரணமாயின. மழையின் தூறலாக, மனதோடு ஒன்றிய பாடசாலைப் பருவத்து இதமான நட்பைத் தொடர்வதற்கு, இன்றைய சூழல் போல் முகநூல், தொலைபேசி என்று எந்த தொழில்நுட்ப வசதிகளும் இல்லாமற்போனதுடன் கடிதத் தொடர்புகளுக்குக் கூட வழியற்றுப் பிரிந்து போன நட்புகள் ஏராளம். வாலிபவயதில் தம்முடனான நட்பைக் கொண்டாட ஆண்களுக்கு இருந்த உரிமையும் சுதந்திரமும் பெண்களுக்குக் கிடைக்கவில்லை என்பது நிசர்சனம். அதுமட்டுமன்றி கள்ளமற்ற நட்பில் ஆண் பெண்ணென்ற வேறுபாடும், பெற்றோரும் வளரும் சுற்றமும் விதைத்த பொறாமை என்ற நச்சுவிதையும் அந்தப் பருவத்தில் உண்மையான நட்பு என்ற அழகான செடி எம்உள்ளங்களில் முளை விட முனையாமைற்கான முதன்மைக் காரணங்களாகிப் போயின.

அதன்பின் பல்கலைக்கழகம் புகுவதற்குச் சிலருக்கு வாய்ப்புக் கிடைத்திருக்கும். இங்கு வாழ்க்கைப் பாடம் புரிந்து, அனுபவஆசான் தந்த பாடத்துடன், பெற்றோர்களின் சிறகில், அவர்கள் அணைப்பில் இருந்த காலம் போய், வேறு இடத்தில், புதிய நண்பர்களுடன், பெற்றோர்களின் கண்காணிப்பின்றி எமது ஒவ்வொரு அடியையும் நாமே தீர்மானித்து வாழப் பயின்ற காலமிது. நட்பு மட்டுமே நம் இதயத்தை பல சமயங்களில் தனிமையை, மனதின் துக்கங்களைத் துடைத்துப் போட்டிருக்கிறது. பல்கலைக்கழக நட்பு மிகவும் தேவையானதாய், ஒருவரின் தேவையை உணர்ந்ததாய், அறையின் சகதோழரை அனுசரித்துப் போவதற்காய் என்று நட்பின் அடிஆழம் வரைத் தொட்டு நம்மைச் சீர் செய்து சென்றிருக்கிறது.

அதன் பின் அனைவரதும் வாழ்வில் தமக்கென ஒரு வேலையைத் தேடிக் கொண்டு, தமக்கென ஒரு சிறு கூட்டை அமைத்துக் கொள்வதற்காய் புலம் பெயர்ந்த பாதையில் அடியெடுத்து வைத்த காலம். பழகிய சொந்தங்கள், பெற்றோர்கள், நண்பர்கள் என்று அனைவரையும் பிரிந்து, மணம் முடித்துப் புலம் பெயர் தேசங்களில் எமது வாழ்வின் போக்கே இன்று முற்றிலுமாய் மாறி விட்டது. அன்பிற்கும் ஆறுதலுக்கும், துயரத்தில் நம்மைத் தோள் தந்து தாங்கிக் கொள்வதற்கும் உண்மையான நட்பு ஒன்று அவசியமானதாய் ஆகி விட்டது. எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ளவும், வாட்டும் தனிமையில் மனதிலுள்ளவற்றைப் கொட்டி மனஅழுத்தத்திலிருந்து விடுபடவும் நம்மைப் புரிந்து கொள்ளும் நண்பர்கள் இங்கே அவசியமாகி விட்டார்கள். மனைவி அல்லது கணவன் அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரமென்பார்கள். அதைப்போலவே அலைமீது செல்லும் ஓடம் போன்ற

எம்வாழ்க்கை அமைதியாகச் செல்லவேண்டும் என்றால் நல்ல குடும்பமும் நம்மைப் புரிந்து கொண்ட நட்பு வட்டமும் அமைந்து விடுவதும் இறைவன் கொடுத்த வரமென்றாகிப் போனது.

ஆனால், அந்த ஆழமான அருமையான நட்பு, எத்தனை பேருக்கு அமைந்து விடுகிறது என்பதுதான் இன்றைய கேள்வி. எமது மற்றைய பருவங்கள் போலன்றி, இங்கு கல்வியோ, தொழிலோ ஒருவருக்கொருவர் போட்டியாக இருக்கப் போவதில்லை. வாழ்க்கை பற்றிய தெளிவும் எமது வாழ்க்கை எப்படி அமையவேண்டும் என்ற மனப்பக்குவமும் அனைவருக்கும் வந்து விட்ட நிலையில் இங்கு அடிப்படைத் தேவையாயிருப்பது உண்மையான அன்பு மட்டுமே. பக்குவப்படாத மனநிலையுடன் பென்சிலுக்கும் பேனாவிற்கும் சண்டை போடுவதற்கு நாமொன்றும் இன்னும் பள்ளிப் பருவத்து சிறார்களல்ல. வாழ்வின் பாதியைக் கடந்த நிலையில், அனுபவத்தாலும், அறிவாலும் பட்டறிவு கொண்டு வாழ்வையும் மனிதர்களையும் நன்கு எடை போடத் தெரிந்தவர்கள். நட்பு வட்டத்தைப் பெருக்கும் எண்ணத்துடன் எடுத்தவுடன் எல்லோருடனும் பழகப் போய் உள்ளத்தில் மாறா வலியையும், நட்புப் பற்றிய கசப்பான எண்ணத்தை ஆறா வடுவாக மனதிலும் வாங்கிக் கொள்ளாமல், எல்லோருடனும் நட்பாகப் பழகிக் கொண்டு, நம் சிந்தையுடன் ஒத்துப் போகும் நட்புகளை நமக்கு நெருக்கமாக ஆக்கிக் கொள்ளலாம். அத்துடன் நெருஞ்சி முள்ளாக காலில் எப்போதும் உறுத்திக் கொண்டு, வலியை மட்டும் ஏற்படுத்தும் நட்பை வாழ்விலிருந்து தூக்கி போட்டுவிட்டு தெளிவாக நடை போடத் தெரிந்து கொள்வதும் வாழ்க்கைக்கு மிகவும் தேவையாகி விடுகிறது. விரல்களைத் தாண்டி வளரும் நகங்களை நறுக்குவது போன்று, நம்மைப் புரிந்து கொள்ளாத, அன்பை மதிக்கத் தெரியாத நட்புகளை அகற்றுவதும் அவசியமாகின்றது. அடுத்தவரைப் பற்றிக் குறை கூறுவதிலேயே பொழுதைக் கழிப்பவர்கள் எமது பொன்னான நேரத்தை மட்டும் தின்று விடுவதில்லை, மெதுவாக எம்மனதிலும் மனிதர்களைப் பற்றிய நச்சு விதையை ஊன்றுகிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டு தவிர்க்கப் பழகவேண்டும்.

பிள்ளைகளாலேயே பாதி நட்புகளில் பிளவு ஏற்பட்டிருக்கிறது என்றால் அதை யாராலும் மறுக்க முடியாது. நமது செல்வ நிலை, நமது சிறார்களின் ஆற்றல்கள் எல்லாமே தனித்துவமானவை, எமது கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டவை என்பது புரிந்து விட்டால் நட்பின் முதல் எதிரியான பொறாமையைத் தீயை நீர் ஊற்றி அணைத்துவிடலாம். நெஞ்சுக்கு நேர்மையாகப் பழக தொடங்கி விட்டால், இடையிடையே வரக் கூடிய சில்லறைப் பிரச்சனைகளுக்கு மனம் விட்டுப் பேசுவதன் மூலம் மனவேறுபாடுகள் முளைக்க முன்னரே முளையிலே கிள்ளி விடலாம். வெள்ளையின மக்கள் வாழ்க்கை முறையில் நாம் இன்னொரு வாழ்க்கைப் பாடத்தையும் கற்றிருக்கிறோம். அடுத்தவரின் சொந்தப் பிரச்சனையில் மூக்கை நுழைக்கக் கூடாது

என்பதுடன் நமது சுதந்திரம் என்பது அடுத்தவரின் மூக்கு நுனி வரைக்குமே என்ற அரிய பாடம் தான் அது. எம்முடன் சிலவற்றைப் பகிர்ந்து கொள்ளவில்லை என்றால் அதற்கு ஒரு காரணம் இருக்கும் என்பதைப் புரிந்து கொண்டு எப்போதும் ஒரு பாதுகாப்பான இடைவெளியை நட்பிடையே பேணும் போது தேவையற்ற மனக்கசப்புகள் இல்லாமற் போய் விடுகின்றன.

நல்ல நட்பு தரும் கதகதப்பையும், நமக்காக என்று யாராவது இருக்கிறார்கள் என்ற பாதுகாப்பு உணர்வையும் உண்மையான நட்பின் ஆழம் தரும் சுகத்தையும் அனுபவித்துப் பார்த்தால் மட்டுமே புரியும். ஒருவருக்கொருவர் உதவுவதும், துணை நிற்பதும் என்று மனது ஒத்துப் பழகும் நட்பிற்கு எந்த வேறுபாடுகளும் இல்லையெனினும் பார்க்கும் உலகம் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேயான நட்பை மாசுபடுத்தி களங்கம் கற்பிக்க தயாராக இருப்பதால் நடைமுறையில் அப்படியான நட்பு உயிர் வாழ்வதில்லை. இனிவரும் காலங்களில் அடுத்த தலைமுறை இப்படியான மாயக்கண்ணாடிகளை உடைத்தெறியும் என்று உறுதியாக நம்பலாம்.

எப்போதும் சிரித்துப்பேசி, நம்முன்னால் ஒருகதை பேசி, வெளியில் வேறுகதை பேசும் நட்பு வாழ்வில் எமக்கு ஒரு என்றாவது ஒரு நாள் ஆறாக்காயத்தை ஏற்படுத்தத் தயாராக இருக்கும். ஆனால் செய்யும் தவறை எடுத்துக் கூறி, நாம் செய்த பிழையை நம்மிடம் விவாதிக்கும் நட்பு மிகவும் உண்மையானது என்பதை ஏற்கும் பக்குவம் வந்து விட்டால் மரணத்தால் மட்டுமே அந்த நட்பைப் பிரிக்க முடியும். உள்ளம் நோகும்படியான வார்த்தைகளைப் பேசுதல், நம்மை பொது இடத்தில் அவமதிக்கும் விதமாகப் பேசுதல், தேவைகளுக்கு மட்டும் உபயோகித்தல்,உண்மையான அன்பை அலட்சியப்படுத்துதல் என்பன நட்புக்கு நிச்சயமாக விரோதமானவை. அன்பு எப்போதும் பகிர்ந்து கொள்ளும் போது இரட்டிப்பாகக் கூடியது, எமக்கு மட்டுமே நண்பர்கள் என்று சிறுவட்டத்துள் அடக்கப்பார்த்து எதிர்பார்ப்புகளை அதிகரித்துக் கொண்டோமானால் ஏமாற்றம் நிச்சயம் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

ஒத்த உணர்ச்சிகளும், ஒன்றுபட்ட நினைவுகளும் தரும் நிறைவைப் போலவே, நட்பிடையே வரக்கூடிய வேற்றுமைகளையும் மதிக்கப் பழகிக் கொண்டுவிட்டால், காதலைப்போலவே நட்பும் நம் இறப்புவரைத் தொடர்ந்து வரும் ஒரு சுகமான கீதமாகி விடும். இரத்த பந்தங்கள் யாருமற்ற இடத்தில் தனித்து வாழும் உறவுகளுக்கு நட்பு தரும் பலம் எதனையும் எதிர் நோக்கி வெல்லவல்ல மனபலத்தைத் தந்து விடும். அந்த நட்பை மதித்து, பொறாமை உணர்வைக் களைந்து, அன்பைப் பகிர்ந்து எமது வருங்கால சந்ததியினருக்கு ஒரு முன்னுதாரணமாக விளங்குவதுடன் மட்டுமல்லாமல் வருங்காலத்தில் அவர்களிடையான ஒரு நட்புப்பாலத்தையும் நம்மால் ஏற்படுத்தி விடமுடியுமென்றால்,

அதைவிட அவர்களுக்கு நாம் கொடுக்கக் மிகச்சிறந்த அன்பளிப்பு வேறு என்னவாக இருக்க முடியும்.

புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழ் பெண்கள் எதிர் நோக்கும் சவால்கள் நிறைய இருக்கின்றன. தமிழ் பெண்கள் புலம் பெயர்ந்த நாடுகளிலுள்ள பிரச்சனைகளை தாண்டி வாழ பழகிக்கொள்ள வேண்டும். அவை பணப் பிரச்சினைகள், மொழி பிரச்சினை, உணவுப் பழக்க வழக்கங்கள், வேலைப் பிரச்சினைகள் மற்றும் கலாசாரமும் உடற் பயிற்சி முறைகளும் அடங்குகின்றன.

பணப் பிரச்சினையை எதிர் நோக்குவதால் பெண்கள் வேலைக்கு போவது மிகவும் அவசியமாகிறது. தமிழ் பெண்கள் ஆங்கில மொழியை புலம் பெயர்ந்த நாடுகளில் படிப்பது அவசியமாகிறது. மொழியை அறியாவிடில் மற்றவர்களுடன் தொடர்பு கொள்வது, வேலைகள் செய்வது கஸ்ரமாகிறது.

இந்த நாடுகளில் பல்வேறு இன மக்களும் அவர்களுடைய கலாசாரங்களும் நம் கலாசாரத்திலிருந்து வித்தியாசமாக இருப்பதால் நாம் அதற்கு ஏற்றபடி வாழப் பழகிக்கொள்வது அவசியமாகிறது. அதேபோல் பிள்ளைகளின் வளர்ப்பு முறைகளும் மாறுபடுகின்றன. ஆனாலும் நம் பிள்ளைகளுக்கும் எம் கலாசாரத்தையும், தமிழ் மொழியையும் பேணி வளர்ப்பது எமது கடமை ஆகிறது.

அத்தோடு கால நிலைகளுக்கு ஏற்ப உடைகளும் அந்தந்த நாடுகளுக்கேற்ப வேறுபடுகிறது. உணவு பழக்க வழக்கங்கள் மிகவும் மாறுபட்ட விதத்தில் காணப்படுகின்றது. இதனால் உடற்பயிற்சி முறைகளும் கைக்கொள்வது மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

மூத்த பிரஜைகளின் நலன் பேணுமுகமாக, கேசி தமிழ் மன்றத்தினால் நடாத்தப் படுகின்ற மூத்த பிரஜைகள் ஒன்றுகூடல், ஒவ்வொரு மாதத்தின் கடைசி சனிக்கிழமை முற்பகல் 10:00 தொடக்கம் மதியம் 2:00 மணிவரை, 112 High Street, Berwick, VIC 3806 எனும் முகவரியில் அமைந்துள்ள "Berwick Senior Citizens Hall" இல் நடைபெறுகின்றது. மேலதிக விபரங்கள் கேசி தமிழ் மன்ற இணையத்தளத்தில் www.caseytamilmanram.org.au பார்வையிடலாம்.

# அன்னை என்னும் ஆலயம்..

-திருமதி. கலா. சிவகுமாரவேலு-

"அம்மா, அம்மா" என்று கூப்பிட்டவாறு வீட்டினுள் நுழைந்தான் மயூரன். அவனது குரலில் ஒரு மாற்றத்தை உணர்ந்த கோதை பரபரப்புடன் சமையல் செய்த இடத்திலிருந்து எழும்பி வேகமாக மகனை நோக்கி வந்தாள். "என்ன மயூரா பாடசாலையில் ஏதாவது பிரச்சினையா" என்று கேட்ட தாயை நோக்கி " இல்லை அம்மா, பக்கத்து வீட்டுத் திவாகர் என்னைப் பார்த்து ஒரே `அப்பா இல்லாத அனாதைப் பயல், அப்பா இல்லாத அனாதைப் பயல்` என ஏளனமாகச் சொல்கின்றான் அம்மா, சொல்லுங்கள் அம்மா, நான் அப்பா இல்லாத அனாதையா? எங்க அம்மா எனது அப்பா? நானும் எத்தனையோ தடவை உங்களிடம் இதைப்பற்றிக் கேட்கும் போதெல்லாம் மௌனமாகவே இருக்கின்றீர்கள். இன்றைக்கு இதற்கு நீங்கள் பதில் சொல்லாவிட்டால் நான் சாப்பிடவும் மாட்டேன். இவ்விடத்தை விட்டு அசையவும் மாட்டேன்" என மயூரன் பிடிவாதமாக நின்றான்.

தெய்வமே, இது என்ன சோதனை? நான் என் மகனிடம் எதைச் சொல்வேன். வாழ்ந்த கதை சொல்லவா? விதி செய்த சதியால் ஏற்பட்ட என் நிலையைச் சொல்வதா? இந்தப் பிஞ்சு உள்ளத்தில் வேதனையின் சாயல் படியவே கூடாது. என் கண்ணீர்க் காவியம் என்னோடேயே முடிந்து போகட்டும், என மனதில் எண்ணியவாறே, மகனை நோக்கி, தம்பி! உங்கட அப்பா மிகவும் நல்லவர். அவர் உன்னையும் என்னையும் நல்லா வைத்திருக்க வேண்டும் என்பதற்காக வெளிநாட்டிற்கு வேலை செய்யப் போய்விட்டார். அவர் அங்கே கனக்கக் காசு சம்பாதித்ததும் எங்களைப் பார்க்க ஓடி வருவாரடா கண்ணா, இனி யார் என்ன சொன்னாலும் நீ கவலைப்படாதே. உனது படிப்பில் மட்டும் நன்கு கவனம் செலுத்தி நன்றாகப் படித்து, வருகிற ஐந்தாந்தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் நீ பாஸ் பண்ணினால் அது போதும் மகனே எனக்கு, உன் அப்பா வரும் வரையில் அரசாங்கம் தரும் பணத்தில் நீ படித்து கெட்டிக்காரனாக வரலாம். இப்ப நீ உடுப்பை மாற்றிவிட்டு சாப்பிட வா ராசா என அன்போடு அழைத்தாள் கோதை. அப்படியா அம்மா, அப்ப, அப்பா நிறையக் காசு உழைத்து வந்ததும் நாங்களும் ஒரு பெரிய வீட்டில் எல்லா வசதிகளோடும் சந்தோஷமாக வாழலாம், நீங்களும் இந்த மரக்கறித் தோட்டத்தில் கஷ்டப்பட்டு உழைக்கத் தேவையில்லை என்ன அம்மா. எனத் தாயை அணைத்தபடி கேட்டான் மயூரன். "ஓம்! ஓம்!!" எனப் பதிலளித்தாள் கோதை.

கோதையின் எண்ணவோட்டத்தில் கடந்த கால நினைவுகள் நீரோட்டம் போல அலைமோதத் தொடங்கியது. கோதை ஒரு நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவள்.

அவள்தான் குடும்பத்தில் மூத்தவள். அவளுக்குப் பிறகு நான்கு சகோதரங்கள். அதில் மூவர் பெண்கள். ஒரேயொரு ஆண்பிள்ளை. தந்தையோ ஒரு வங்கியில் சிற்றூழியராக வேலை செய்து கொண்டிருந்தார். கோதையின் தாய் தனது கெட்டித்தனத்தால் கடனில்லாமல் ஒருவாறு சமாளித்து குடும்பத்தைக் கொண்டு நடத்தினாள். கோதை காண்பவர் கண்களை கவரக்கூடிய அழகியாக இருந்தாள். அவள் பத்தாம் வகுப்பின் பின் பாடசாலைக்குச் செல்லாமல், மற்ற சகோதரங்களையாவது உயர் கல்வி படிக்க வைக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் அம்மாவிற்கு உதவியாக தானும் தையல் வேலையில் ஈடுபடலானாள்.

ஒரு நாள் கோதையின் தந்தை சுந்தரத்தைத் தேடி அவர் வேலை செய்யும் வங்கியில் கிளார்க் வேலை செய்யும் மகிந்தன், அவர்களது வீட்டிற்கு வந்தான். அவன் வந்தபோது தாயார் ஏதோ அவசர வேலையாக வெளியே சென்றிருந்தாள். தந்தையும் வீட்டில் இல்லை. ஆகையால் கோதையே மகிந்தனுக்கு பதில் சொல்ல வேண்டியதாயிற்று. கோதையைக் கண்டவுடனேயே மகிந்தனுக்கு அவள் மீது விருப்பம் உண்டாயிற்று. இவள்தான் தன் வருங்கால மனைவி என முடிவு செய்துவிட்டான். மறுநாள் வங்கிக்கு வந்த சுந்தரத்தை தனிமையில் அழைத்துச் சென்று தன் எண்ணத்தைக் கூறி, சுந்தரத்திடம் பலவாறு ஆசை வார்த்தைகளைக் கூறி அவனைத் தன் எண்ணத்திற்கு உடன்பட வைத்தான் மகிந்தன். வேலை முடிந்து வீடு திரும்பிய சுந்தரமும் மகிந்தனைப் பற்றிப் புகழாரம் சூட்டத் தொடங்கினார். நல்ல ஒழுக்கமான பையன், தானே எல்லாச் செலவுகளையும் செய்கிறானாம். எங்களிடம் தான் எதையும் எதிர்பார்க்க வில்லையாம். சிறு வயதிலேயே ஒரு விபத்தில் தனது பெற்றோர் இறந்தபின் தன் சிறிய தாயார்தான் தன்னை வளர்த்து ஆளாக்கியதாகவும் தனது விருப்பத்திற்கு அவர் எந்த மறுப்பும் சொல்ல மாட்டார். எனவே இந்த திருமணத்திற்கு எந்த தடையும் இல்லை என்றும், தனக்குக் கோதையைத் திருமணம் செய்து வைத்தால் மட்டும் போதும் என்று முகுந்தன் தன்னிடம் கூறியதாக சுந்தரம் மனைவியிடம் கூறினார். ஆனால் கோதையோ, தனது தம்பி தங்கைகளின் படிப்பு முடியும்வரை தாய்க்கு உதவியாக இருக்கப்போவதாக எவ்வளவோ சொல்லிப்பார்த்தும் அவளது கோரிக்கை எடுபடவில்லை. கடைசியில் சுந்தரத்தின் விருப்பம் போலவே எல்லாம் நடந்தது.

திருமணமாகிய புதிதில் கோதையின் இல்லற வாழ்வில் இனிய தென்றலே வீசியது. கோதையும் திருமணமாகி ஒரு வருடத்தில் மயூரனைப் பெற்றெடுத்து, இருவரும் பெருமகிழ்ச்சியுடன் இல்லறம் என்னும் இனிய பந்தத்தில் இன்புற்றிருந்தனர். யார் கண் பட்டதோ தெரியவில்லை, வங்கிக்கு வந்த வாடிக்கையாளர் ஒருவர் மகிந்தனிடம் தனக்குத் தெரிந்த முகவர் ஒருவர் அவுஸ்திரேலியாவிற்கு ஆட்களைப் படகில் அனுப்புவதாகவும் சுமார் இருபது நாட்களில் அங்கு சென்றடையலாம் எனவும் நல்ல நம்பிக்கையுள்ளவர் அம் முகவர் எனவும்,

ஆக, ரூபா பத்து லட்சம் கொடுத்தால் போதுமென்றும் மகிந்தனிடம் ஆசை வார்த்தைகளை அள்ளி வீசினார்.

அங்கு சென்றதும் ஆரம்பத்தில் அகதி முகாமில் தங்க வைத்து அரசாங்கம் நன்றாக கவனித்து செலவுக்குப் பணம் தரும் என்றும் அதில் மிச்சம் பிடித்து வீட்டிற்கு அனுப்பலாம் எனவும் மூன்று மாதத்தில் நிரந்தர வதிவிட உரிமை கொடுத்த பின் குடும்பத்தைக் கூப்பிடலாம் என பலவாறாக அவனது மனதில் ஆசையை ஏற்படுத்தினார். மகிந்தனும் மகுடிக்குக் கட்டுண்ட நாகம் போல அவரது பேச்சில் மயங்கினான். அவனது உள்ளத்தில் அவுஸ்ரேலியா சென்று அங்கு வாழும் உல்லாச வாழ்க்கையைத் தானும் வாழவேண்டும் என்ற எண்ணம் அலை பாயத் தொடங்கியது.

வீட்டிற்கு வந்ததும் கோதையிடம் முழு விபரத்தையும் கூறி இன்னும் ஒரு மாதத்திற்குள் எப்படியும் ரூபா பத்து லட்சம் சேர்க்க வேண்டும் அதற்கு என்ன செய்வது என கோதையிடம் ஆலோசனையும் கேட்டான். இதைக் கேட்டதும் கோதையின் நெஞ்சில் பேரிடி விழுந்தது போல் இருந்தது. ''கடவுளே, இது என்ன என் குடும்பத்துக்கு வந்த சோதனை. ஊர் பேர் தெரியாத அந்நிய தேச பயணம். அதுவும் ஆழ் கடலில் நீண்ட நாள் செல்லவேண்டும். செல்வதற்கு ரூபா பத்து லட்சம். இது எல்லாம் நடக்கிற காரியமா?'' என மனதில் எண்ணியவளாய், மகிந்தனிடம் ''இது நடக்காத காரியம், இந்த எண்ணத்தை மறந்து விடுங்கள். எங்களுக்கு இப்ப கிடைக்கின்ற வருமானத்திலேயே நாங்கள் நிம்மதியாக வாழலாம்'' என எவ்வளவோ கெஞ்சி மன்றாடிப் பார்த்தாள். ஆனால் மகிந்தனோ தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்பது போல் தன் நினைப்பில் உறுதியாக இருந்ததுடன் பணத்திற்காக அங்குமிங்கும் அலையலானான்.

அவனது முயற்சிகள் ஒன்றும் சரிவராததால் சலிப்புடன் வீட்டிற்கு வந்தவன், ''சே, நான் ஒரு மடையன், நல்ல சீதனத்தோடு எவ்வளவோ பேர் பெண் தருவதாக முன் வந்தும், இவளது அழகில் மயங்கி ஒன்றுக்கும் வழியில்லாத இவளைப் போய் நான் கல்யாணம் முடித்ததற்கு எனக்கு நல்ல பலன் கிடைத்து விட்டது. பத்து லட்ச ரூபா காசுக்கு நாயாக அலைய வேண்டியிருக்கு'' என கோபத்துடன் கூறியபடி கோதையையும் வாயில் வந்தபடி பேசலானான். ''இன்னும் ஒரு மாதத்திற்குள் அவ்வளவு பணத்திற்கும் நான் எங்கே போவேன்'' என மனதிற்குள் சலித்தவாறே மேசையில் கிடந்த தினசரிப் பத்திரிகையை வாசிக்கத் தொடங்கியவனின் கண்ணில் ஒரு விளம்பரம் பட்டது. மிகவும் அவசரமாக ஒரு செல்வந்தரின் மகளுக்கு சிறுநீரகம் (கிட்னி) ஒன்று தேவைப்படுவதாகவும் 25 வயதுக்குட்பட்ட A குரூப் இரத்த வகையைச் சேர்ந்த பெண் யாராவது தந்துதவினால் சன்மானமாக ரூபா பத்து லட்சம் தரப்படும். வைத்திய செலவுகளுக்கும் தாங்களே பொறுப்பு என அவ் விளம்பரத்தில் காணப்பட்டது. இதை

வாசித்ததும் மகிந்தனின் மனதில் ஓர் எண்ணம் பளிச்சிட்டது.

கோதைக்கும் 23வயது. அவளது இரத்த வகையும் A குரூப். நல்ல தேக ஆரோக்கியத்துடனும் இருக்கின்றாள். பணத்திற்கு இதை விட்டால் வேறு வழியில்லை, என்று யோசித்தவனாக, கோதையிடம் ஒரு சிறுநீரகத்தை தானமாக வழங்கும்படி நச்சரிக்கத் தொடங்கினான். கோதை அதற்கு உடன்படாததால் அவளைப் பலவாறு துன்புறுத்தினான். ஆனால் கோதை எதற்கும் ஒத்து வராததால், தன் இறுதி அஸ்திரத்தை அவள் மீது செலுத்தினான். ''அயலூரில் வாழும் வசதியான குடும்பத்தைச் சேர்ந்த தம்பதியினர், தங்களுக்குக் குழந்தை இல்லாத காரணத்தால் ஓர் ஆண் குழந்தையை தத்தெடுத்து வளர்க்க விரும்புவதாகவும், அதுவும் இரண்டு வயதுக்குட்பட்ட நல்ல தேகாரோக்கியமுள்ள குழந்தைதான் வேண்டும் எனப் பலரிடம் வினவியதாக எனது நண்பன் சொன்னான். எவ்வளவு பணம் வேண்டும் என்றாலும் தருகிறார்களாம். இதை விட எனக்கு வேறு வழியில்லை. நான் இப்பவே சென்று அவர்களை அழைத்து வந்து மயூரனை கொடுக்கப் போகின்றேன்'' எனக் கூறியபடியே வேகமாக வெளியேறினான்.

கோதைக்கு வானமே இடிந்து தலையில் விழுந்தது போலிருந்தது. தனது வீட்டிற்குப் போனால் எப்படியும் மகிந்தன் தேடி வருவான். இருக்கின்ற இந்தக் கொஞ்ச நேரத்திற்குள் ஏதாவது முடிவெடுத்தாக வேண்டும். ''கடவுளே, என்ர குஞ்சைப் பிரிந்து நான் உயிர் வாழ்வதா'' என மனதில் புலம்பிய வண்ணம் சுறு சுறுப்பாகச் செயற்படத் தொடங்கினாள். தனக்கும் மகனுக்கும் மாற்றுடைகளை ஒரு பெட்டியில் அடுக்கி, கையிலிருந்த கொஞ்சப் பணத்துடன், நகைகளைத்தான் மகிந்தன் பிடுங்கிவிட்டானே, வேக வேகமாக மகனைத் தூக்கிக்கொண்டு வீட்டை விட்டு வெளியேறி பேரூந்து நிலையத்தை அடைந்து, அங்கு நீண்ட தூரம் செல்லும் பஸ் ஒன்றில் ஏறிப் பயணமானாள்.

''தெய்வமே நான் எங்கு போவேன்? எப்படி வாழ்வேன்? நாதியற்ற இந்த அபலைக்கு நீதான் ஒரு நல்ல வழி காட்டப்பா, சர்வலோக நாயகா, எங்களைக் கைவிடாதேயப்பா'' என மனமுருகி கண்ணீர் வடிக்கலானாள். பஸ்சில் அவளையே நீண்ட நேரம் கவனித்துக் கொண்டிருந்த பெரியவர் ஒருவர், பஸ்சில் இருந்தவர்கள் இளைப்பாறுவதற்காக, பஸ் ஒருஇடத்தில் நின்றபோது, அதிலிருந்தவர்கள் எல்லோரும் இறங்கிச் சென்ற பின்னர், அவளது அருகில் வந்து, ''மகளே நீ பஸ்சில் ஏறினதில் இருந்து ஓயாமல் கண்ணீர் வடித்து அழுதுகொண்டே இருக்கின்றாய். உனக்கு என்னம்மா அவ்வளவு துயரம்? என்னை உனது அப்பாவாக நினைத்து உன் சோகத்தை மனந் திறந்து சொல்லம்மா. என்னால் முடிந்தளவு உதவி செய்கிறேன். கையில் வேறு குழந்தையும் வைத்திருக்கின்றாய்.'' என ஆறுதலுடன் கேட்டார்.



உடனேயே கோதை தன்னைப் பற்றிய முழு விபரத்தையும், தனது இன்றைய நிலையையும், எந்த ஆதரவுமற்ற அநாதையாக தானும் தன் செல்வ மகனும் நடுத்தெருவுக்கு வந்த கண்ணீர்க் காவியத்தைக் கூறிப் புலம்பலானாள். உடனேயே அந்தப் பெரியவர் ''மகளே நீ எதற்கும் கவலைப்படாதே, நீயோ இளம் வயதுக்காரி. உன்னைப் போன்றவர்கள் தனித்து வாழ்வது என்பது முடியாத காரியம். இந்த உலகம் உன்னை நிம்மதியாக வாழ விடாது. எனது வீட்டிற்குப் பக்கத்திலேயே எனது மரக்கறித் தோட்டமும் அதில் ஒரு சிறிய ஓலை வீடும் உள்ளது. நீ எனது தோட்டத்தைப் பராமரித்துக்கொண்டு அதில் இருக்கலாம். மாதா மாதம் சம்பளமாக ஒரு சிறு தொகைப் பணத்தை நான் தருகிறேன். நீ எதற்கும் கலங்காதே. உனது மகன் மயூரனை நன்றாகப் படிக்க வைத்து அவனை நல்லவனாகவும் வல்லவனாகவும் வளர்த்தெடு'' என ஆறுதல் தரும் வகையில் அன்பாகக் கூறினார். கோதைக்கோ கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது போல இருந்தது.

பெரியவர் தான் இறங்க வேண்டிய இடம் வந்ததும் கோதையையும் குழந்தையையும் அழைத்துக் கொண்டு தனது வீட்டிற்குச் சென்று அவளைப் பற்றிய முழு விபரத்தையும் அவளது இன்றைய நிலை பற்றியும் விளக்கமாக எடுத்துக் கூறினார். குடும்பத்தினர் எல்லோரும் கோதையையும் மயூரனையும் ஆசையுடனும் பாசத்துடனும் உபசரித்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து பெரியவர் சொன்னது போல அவர்களது வீட்டிற்கு அருகிலேயே கோதை பாதுகாப்பாக இருப்பதற்கு வசதிகள் செய்து கொடுத்தனர். இதுவே கோதையின் கடந்த கால வாழ்க்கை வரலாறு.

கோதையும் அங்கு வந்து சுமார் பத்து வருடங்கள் கடந்து விட்டன. மயூரனும் இப்பொழுது தரம் ஐந்தில் படிக்கின்றான். மகிந்தனைப் பற்றியோ, அவளது குடும்பத்தைப் பற்றியோ எந்த தகவலும் இல்லை.

காலச் சக்கர சுழற்சியில் கோதையின் வாழ்விலும் விடிவெள்ளி உதயமாயிற்று. ஆம், மயூரன் கல்வியிலும், விளையாட்டிலும் ஏனைய செயற்பாடுகளிலும் திறமை யுள்ளவனாகவும், நற் பழக்கவழக்கங்கள் உடையவனாகவும் இருந்தமையால் அவன்

யாவராலும் விரும்பப்பட்டான். அத்துடன் அவனது கல்வித் திறமையினால் அரச உபகாரப் பணமும் அவனுக்கு கிடைத்தது. பக்கத்து வீட்டு பெரியவரது குடும்பமும் அவனுக்கு வேண்டிய உதவிகள் செய்தனர். மயூரனும் நன்கு கற்றுத் தேறி பல்கலைக் கழகப் பட்டமும் பெற்று, மகிந்தன் கடமையாற்றிய வங்கிக் கிளை ஒன்றில் முகாமையாளராகப் பணிபுரிந்தான். மயூரனின் நல்ல குணத்திற்கும் கோதையின் நல்ல மனதிற்கும் ஏற்றவாறு உயர்ந்த அந்தஸ்துள்ள ஒரு குடும்பத்தில் மயூரனுக்கு திருமணமும் நடந்தேறியது. அவர்கள் இப்போது வசதியான வாழ்க்கை வாழ்ந்தனர். கோதைக்கு அழகிய ஒரு பேத்தியும் இருக்கின்றாள். அவளைக் கொஞ்சி மகிழ்வதிலேயே கோதையின் பொழுதெல்லாம் கழிந்தது.

ஒருநாள் மயூரன் ''அம்மா! அம்மா!!'' எனக் கூப்பிட்டபடி ஒரு பெரியவரை அழைத்து வந்தான். ''அம்மா, இவரது பெயர் மகிந்தனாம். இவரும் நான் கடமை புரியும் வங்கியின் கிளை ஒன்றில்தான் முன்பு வேலை செய்தவராம். வெளிநாடு செல்லும் மோகத்தால், வங்கிப் பணத்தைத் திருடப்போய் 15 வருடங்கள் சிறையில் இருந்தாராம். சிறையிலிருந்து வந்து தனது மகனையும் மனைவியையும் தேடி ஊர் ஊராக அலைந்து திரிந்தாராம். இப்பொழுது அவருக்கு நல்ல கண் பாரவையும் இல்லை. யாரோ இங்கு வங்கியின் முகாமையாளராக மயூரன் என்பவர் இருக்கின்றார், எனச் சொல்லக் கேட்டு ஒருவேளை அவரது மகனாக இருக்குமோ என்ற ஆசையில் என்னைக் காண வந்தார். நான் அப்பா பற்றிய விபரத்தைச் சொன்னதும் வேதனையுடன் திரும்பிப் போக இருந்தவரை இங்கு அழைத்து வந்தேன். பாவம் அம்மா. எனது அப்பாவைப் பற்றியோ எந்தத் தகவலும் இல்லை. அவர் இனி வருவாரோ, அல்லது எங்களை மறந்துவிட்டாரோ தெரியவில்லை. இவரை இங்கே தங்க வைப்போம். கடைசிக் காலம்வரை இங்கேயே இருந்து ஏதோ தன்னால் ஆன வேலைகளைச் செய்யட்டும். உங்களுக்குச் சம்மதம் தானே அம்மா'' என மயூரன் கோதையிடம் கேட்டான்.

கோதைக்கு இவ்வுலகமே தன் கண் முன்னால் சுழலுவதுபோல இருந்தது. தந்தையை அறியாத தனயனும், தனயனை உணராத தந்தையும், தந்தையை வீட்டில் வைத்திருக்க தாயிடமே சம்மதம் கேட்கும் மகனும், ''இறைவா உன் திருவிளையாடலுக்கு எல்லையே கிடையாதா? பிரிந்தவர்களை ஒன்று சேர்த்த தெய்வமே உன் திருவடிகளுக்கு கோடான கோடி வந்தனங்கள் பெருமானே'' என மனதிற்குள் வேண்டிக்கொண்டாள். எனது மகனின் நினைப்பில் தந்தை பிரிந்தவர் பிரிந்தவராகவே இருக்கட்டும். அவனிடம் உண்மையைச் சொன்னால் மகிந்தனை வீட்டை விட்டு அனுப்பினாலும் அனுப்பிவிடுவான். ஏதோ கடைசிக் காலத்திலாவது கணவனுக்குரிய கடமைகளை நான் செய்யவேண்டும். அப்பொழுதுதான் என் ஆத்மா சாந்தியடையும் என மனமுருகியவளாய், மகனை நோக்கி, ''மயூரா உனது விருப்பப்படியே அவர் இங்கேயே இருக்கட்டும்'' என கோதை கூறினாள்.




**அத்தியாயம் - 9** **சூர்யபுத்திரன்**

***முன் கதைச்சுருக்கம்: ஊரிலேயே பெரிய மனிதரும் பணக்காரருமான 72 வயதான முத்துராஜப்பிள்ளையும் அவருடைய இரண்டாவது சன் நடராஜப்பிள்ளையும் அடுத்தடுத்து கொலை செய்யப்படுகிறார்கள். இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணன் தலைமையிலான விசாரணைக்குழுவிற்கு உதவுவதற்காக சிஜடி ஆபீசர் ஆனந்த் எழும்பூருக்கு வருகிறார். சென்னை புதைபொருள் ஆராய்ச்சி மையத்திலிருந்து சில ஆராய்ச்சிகள் மேற்கொள்வதற்காக இந்த ஊருக்கு வந்திருப்பதாகக் கூறி முத்துராஜப்பிள்ளையின் பங்களா அவுட் ஹௌசில் தங்குகிறார் ஆனந்த். இனி....***

நல்ல வேளை, சிற்பாச்சாரியார் பழனிமலை வீட்டில் இருந்தார்.

"ஐயா,உங்க கிட்ட ஒரு சின்ன உதவி. உள்ளே வரலாமா"?

"தாராளமா வாங்க".

"நாங்க ரொம்ப அவசரத்தில இருக்கிறோம். இவரு இன்ஸ்பெக் டர்".

தெரியும் என்பது போலத் தலையாட்டினார் பழனிமலை.

"முன்பு ஒருமுறை வந்தப்ப ஒரு பிளக் அன்ட் ஒயிட் புகைப்படத்த பார்த்த ஞாபகம். சிவராமனும் அவர் சின்ன வயது மகன் ரகுராமனும் இருக்கிற படம்".

"ஆமா, இங்கே தான் சுவரில தொங்கிக்கிட்டிருக்கு. வந்து பாருங்க."

படத்தை நன்றாக ஏறிட்டுப் பார்த்த ஆனந்த் தன்னை மறந்து "தேர் ஹீ இஸ்" என்றான். "சார், புல்லாங்குழல் வாசிக்கிற அந்தப் பையனோட விரல்களைக் கவனிங்க. ஏதாவது புலப்படுதா?"

நன்றாக உற்றுப் பார்த்த இன்ஸ்பெக்டர் திரும்பிப் பார்த்துக் கேட்டார். "யூ மீன் சிக்ஸ் பிங்கர்ஸ் ஒன் ரைட் ஹாண்ட்".

"தேர் யூ ஆர். அந்த ஆறு விரல்களை டிரைவர் பரந்தாமனோட வலது கையில பார்த்தேன். நாங்க உடனே இங்கிருந்து கிளம்பியாகணும்".

"ஐயா, உங்களுக்கு ஆட்சேபணை இல்லேன்னா இந்த போட்டோவை நாங்க எடுத்துப் போகலாமா. திரும்ப உங்க கிட்ட ஒப்படைக்க வேண்டியது என் பொறுப்பு".

ஒன்றுமே புரியாது விழித்த பழனிமலை சரியென்று தலையாட்ட அடுத்த பத்தாவது செக்கனில் ஜீப்பில் தாவினார்கள்.

பழனிமலை தன்னிடம் கூறிய புண்ணியகோடியின் வரலாறு, அவர் கோவிலுக்கு தன் சொத்துக்களை எல்லாம் எழுதி வைத்தது, கோவிலை நிர்வகிக்க ஒரு தர்மகர்த்தா பரம்பரையை உருவாக்கியது, அந்தப் பரம்பரையில் கடைசியாக சிவராமன் பொறுப்பேற்றது, அவன் மாரடைப்பால் இறந்தது, அவனின் மகன் ரகுராமன் ஊரை விட்டு ஓடிப்போனது என்று அத்தனை விவரங்களையும் ஒன்று விடாமல் கூறி முடித்த ஆனந்த் சிவராமனின் மரணம் இயற்கையானது தானா என்ற சந்தேகத்தையும் வெளிப்படுத்தினான்.

"எனது ஊகம் சரியாக இருந்தால், சிறுவயதில் ஓடிப்போன ரகுராமன் தான் இப்போது இளைஞனாக இருக்கும் பரந்தாமன். ஒரு மழை நாள் இரவில் கோவிலுக்கு சென்று வருகிறேன் என்று சொல்லிச் சென்ற சிவராமன் மனவாட்டத்துடன் நேரங்கழிந்து வீடு திரும்பியதற்கும், அடுத்த நாள் ஒரேயடியாக மீளாத துயிலில் ஆழ்ந்து போனதற்கும் இடையில் மிகப்பெரிய ஒரு சம்பவம் இடம்பெற்றிருக்க வேண்டும். அந்த சம்பவத்தில் பெரிய வீட்டின் சம்பந்தம் இருந்திருக்க வேண்டும். இந்த விபரம் ஆறு வயதுச் சிறுவனாக இருந்தாலும் பத்து வயது சுட்டித்தனமும் கெட்டிக்காரத்தனமும் கொண்டு விளங்கிய சிறுவன் ரகுராமனுக்கு தெரிந்திருக்க வேண்டும். இவை எல்லாம் ஒரு ஊகம் மட்டுமே. ஆனால் சரியான ஊகமாக இருக்க முடியும் என்று உள்மனது சொல்கிறது".

"இன்ட்ரெஸ்டிங். தொடர்ந்து சொல்லுங்க ஆனந்த்".

"என்னோட சந்தேகங்களுக்கு இன்னும் வலுவான காரணங்கள் இருக்கு. முதலாவது, பரந்தாமன் வேலையில சேர்ந்ததற்கப்பறம் தான் கொலைகள் நடந்திருக்கு. இரண்டாவது, என்னோட ரூமிலிருந்து இருட்டிலே வேகமாக நடந்து மறைந்த உருவம் ஒரு முப்பது வயதானவனுக்குரியது. மூன்றாவது, இரண்டு கொலைகள் ஒரு கொலை முயற்சி, கைலாசபிள்ளையை ஏர்போர்ட்டில் பிக்கப் பண்ணி கூட வந்தது வரை பரந்தாமனின் பிரசன்னம் இருந்திருக்கிறது. இவை எல்லாம் சரியாக இருந்தால், இல்லாத அம்மாவுக்கு உடல் நலமில்லை என்று பரந்தாமன் சென்னைக்குப் புறப்பட்டுச் சென்றது பொய். இவ்வாறு சொல்லி விட்டு அவன் கலையரசி மேடத்தை எங்கோ கடத்தி வைத்திருக்க வேண்டும்."

"ஏற்கனவே செக்போஸ்ட் எல்லாம் அலர்ட் செய்யச் சொல்லி இருக்கிறேன்" என்று சொன்ன நவனீதகிருஷ்ணன் சென்னை இன்ஸ்பெக்டர் ராமகிருஷ்ணனை மொபைலில் தொடர்பு கொண்டார். அவரிடம் பரந்தாமன் தந்திருந்த சென்னை அட்ரஸை வேரிஃபை பண்ணும்படியும் அந்த வீட்டருகில் ஒரு கான்ஸ்டபிளை மப்டியில் போடுமாறும் கேட்டுக் கொண்டார்.

"ஆனந்த், நீங்க ஊகிக்கிற அந்த மழை இரவில் நடந்த சம்பவம் தான் என்னவாக

இருக்கும்னு தெளிவா ஒண்ணும் தட்டுப் படல. ஏதாவது கோவில் சொத்து விவகாரமாக இருக்கலாமா?"

"ஐ கெஸ் ஸோ. இதைத் தெளிவாக்கணும்னா பரந்தாமனை முதலில கண்டுபிடிக்கணும்".

நவநீதகிருஷ்ணனின் மொபைல் சிணுங்கியது. ஸ்பீக்கரில் போட்டார்.

"சார், கலையரசி அம்மாகிட்ட இருந்து கடைசியாக வந்த அழைப்பை ட்ரேஸ் பண்ணிப்பார்த்ததில அவங்கள எக்மோர் ஸ்டேஷனுக்குப் பக்கத்தில இருக்கிற கைவிடப்பட்ட பழைய கட்டிடம் ஒண்ணில கண்டு பிடிச்சிட்டோம். கொஞ்சம் பயந்து போயிருக்காங்க, ஆனா மத்தபடி ஓகே. யாரு தன்னைக் கடத்தினாங்கன்னு தெரியல என்கிறாங்க".

"குட் நியூஸ். அவங்கள ஸ்டேஷனுக்கு கூட்டியாந்திடுங்க. நாங்க அங்க வந்திடறோம்".

அடுத்த பத்தாவது நிமிடத்தில் அவர்கள் ஸ்டேசனை அடைந்த போது பெஞ்சில் பழனிமலை உட்கார்ந்திருந்தார். இவர்களைக் கண்டதும் எழுந்து வந்து சொன்னார் "இன்ஸ்பெக்டர் சார், உங்க கூடக் கொஞ்சம் பேசணும்".

ஆச்சரியமாக அவரைப் பார்த்த இருவரும் இன்ஸ்பெக்டரின் தனியறைக்குள் அவரோடு நுழைந்தார்கள்.

"ஓடிப்போன ரகுராமன் தான் பரந்தாமன்னு நீங்க கண்டுபிடிச்சதற்கப்பறம் இன்னமும் நான் உண்மையை மறைக்க விரும்பல".

"கோவிலில இருந்து திரும்பி வந்த சிவராமன் உடம்புக்கு முடியாம ரொம்பக் கஷ்டப்பட்டான். ஏதோ ஒண்ணு நடந்திருக்குன்னு எனக்குத் தெளிவாயிடுச்சு. ஏன்னா வழமையா அவன் ரொம்ப சுறுசுறுப்பான ஜாதி. துருவித் துருவிக் கேட்டப்ப அவன் சொன்னதக் கேட்டு அப்படியே ஆடிப்போயிட்டேன். புண்ணியகோடி முத்துராஜப்பிள்ளையார் கோவிலுக்கு எழுதி வச்ச பல லட்சம் மதிப்புள்ள சொத்தை முத்துராஜப்பிள்ளை என்ற பெயர் ஒற்றுமையை தனக்கு சாதகமாக்கிக்கிட்டு தன்னோட பெயருக்கு மாத்தியிருக்காரு அந்தப் பெரிய மனுஷன். அதுக்கு அவரோட ரெண்டு பிள்ளைங்க நடராஜபிள்ளையும், கைலாயபிள்ளையும் உடந்தையா இருந்திருக்காங்க. சிவராமன் வசமிருந்த கோவில் சம்பந்தப்பட்ட சொத்து விபரங்களில தில்லுமுல்லு செய்திட்டு அவனுக்கு விஷத்த பாலில கலந்து குடிக்கக் கொடுத்திருக்காங்க. இந்த மரணம் இயற்கையானது அல்ல கொலைதான்னு நிரூபிச்சு அவங்கள சட்டத்திற்கு முன்னால நிறுத்தணும்னு ஒரு வெறி ஏற்பட்டுச்சு. ஆனா அவங்க பணபலம், அந்தஸ்துக்கு முன்னால இது எல்லாம் எடுபடம்னு தோணல. எனக்குள்ள ஏற்பட்ட வன்மத்த ரகுராமன் மூலியமா முடிக்கணும்னு முடிவெடுத்தேன்."

சிரமப்பட்டு பேசியவர் கொஞ்சம் மூச்சிறைத்தார்.

"ரகுராமன் ஓடிப்போனதாக நான் சொன்னது பொய். நான் தான் அவன சென்னைக்கு அனுப்பி வச்சேன். இந்தப் பழிவாங்கும் நடவடிக்கையை சொல்லிச் சொல்லி வளர்த்தேன். அவனைப் பரந்தாமனா மாற்றி பெரிய வீட்டில

டிரைவரா சேர்த்து விட்டேன். ஆனந்த் சார் எங்கிட்ட வந்து போனதற்கப்பறம் அவரோட நடவடிக்கைகளில ஒரு கண் வைக்கச் சொல்லி பரந்தாமன் கிட்ட சொன்னதும் நான் தான். என்னோட திட்டம் அப்பாவி சிவராமனைக் கொலை செஞ்சதோட கோவில் சொத்தைக் கொள்ளையடித்த அந்த மூணு பேர பழி வாங்க வேண்டும் என்பது மட்டும் தான். இரண்டு பேர பரந்தாமன் முடிச்சிட்டான். கைலாயபிள்ளைக்கு ஏர்ப்போர்ட்டிலிருந்து வர்ற வழியில சோடாவில தூக்கமாத்திரைகள கலந்து கொடுத்திட்டான். இத்தோட என் வெறி அடங்கிடுச்சு. கலையரசியைக் கடத்தினது என்னோட திட்டத்தில இல்ல....."

பழனிமலை பேசிக்கொண்டிருக்க கதவைத் தட்டி உள்ளே வரலாமா என்று கேட்டார் சுந்தரமூர்த்தி. பின்னால் கலையரசி.

உள்ளே வரும்படி சைகை செய்தார் இன்ஸ்பெக்டர்.

"பரந்தாமன, நான் உடனே பார்க்கணும். எங்கே அந்தப் பையன்?"

"பதட்டப்படாதீங்க, மொதல்ல உட்காருங்க."

"இல்ல சார். என்னால முடியல. கலையரசியைக் கடத்திப் போனது அவன் தான். ஆனா, பொலிஸ்கிட்ட தன்னைக் கடத்தினவன் யாருன்னு தெரியாதுன்னு சொல்லி இருக்கா. ஏன்னா கடத்திப் போனவன் இவங்க குடும்பத்தில மூணு பேர தான் ஏன் கொலை செய்தான்கறதை காரணகாரியத்தோட விளக்கமா சொல்லியிருக்கான். அப்பவே அவன் செய்த கொலைகளை நான் மறந்திட்டேன். ஆனா, எங்க குடும்பம் அவன் அப்பாவுக்கு செய்த கொடுமையையும், சின்ன வயசில அவனை அனாதை ஆக்கினதையும் எல்லாத்துக்கும் மேல கோவில் சொத்தைக் கொள்ளை அடிச்சதையும் என்னால ஜீரணிக்க முடியல. ஏழேழு ஜென்மத்திற்கும் இந்தப் பாவம் தொடர்ந்து வரும். மொதல்ல அவன் காலில விழுந்து மன்னிப்பு கேட்கணும்".

உணர்ச்சி வசப்பட்டார் சுந்தரமூர்த்தி. அமைதியாக உட்கார்ந்திருந்தான் ஆனந்த். அடுத்து என்ன என்பது போல யோசனையில் இருந்தார் நவநீதகிருஷ்ணன்.

சுந்தரமூர்த்தியின் மொபைல் கிணுகிணுத்தது. காதில் வைத்தவரின் முகத்தில் இலேசான மலர்ச்சி எட்டிப்பார்த்தது.

"டாக்டர் போன் பண்ணாங்க. கைலாசபிள்ளைக்கு நினைவு கொஞ்சமா திரும்பிட்டிருக்காம். பொழைச்சிடுவார்னு சொன்னாங்க. எங்க தவறை உணர்ந்து மனப்பூர்வமா மன்னிப்பு கேட்கணும்னு சொன்னப்பவே கடவுள் எங்களை மன்னிச்சிட்டார்னு தான் தோணுது. ஆனாலும் அதுக்கு மேலால இன்னும் நெறய செய்ய வேண்டி இருக்கு. சில தீர்மானமான முடிவுகள் எனக்குள்ள இருக்கு. ஆனா அதுக்கு முன்னாடி பரந்தாமனை நாம கண்டு பிடிச்சாகணும். சட்டத்திற்குப் பயந்து அவன் ஏதாவது விபரீத முடிவு எடுக்க முன்னாடி நாம துரிதமா செயற்படணும் ".

இதுவரை அமைதியாக இருந்த பழனிமலை வாய் திறந்தார்.

"அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம். பரந்தாமன் என் வீட்டில தான் பத்திரமா இருக்கான்".

ஆனந்திற்கு ஆச்சரியமாக இருந்தது. வயதானவராக இருந்தாலும் பழனிமலை எவ்வளவு நிதானமாகக் காய்களை நகர்த்தி இருக்கிறார்.

"உங்க தீர்மானங்களை மொதல்ல சொல்லுங்க மிஸ்டர் சுந்தரமூர்த்தி. சட்டத்த எப்படி கையாளலாம்னு அப்புறமா யோசிப்போம்".

"இன்ஸ்பெக்டர் சார். மொதல்ல பரந்தாமனை சட்டத்தின் பிடியில் இருந்து காப்பாத்தியாகணும். மறைஞ்சு போன தர்மகர்த்தா பரம்பரையை மீளவும் புதுப்பிச்சு அத நிர்வகிக்கிற பொறுப்பை பரந்தாமன ஏத்துக்க வைக்கணும். அன்றைய தேதியில கைமாறிய கோவில் சொத்து மதிப்பை இன்னைய தேதி மதிப்புக்கு மீள ஒப்படைக்கணும்."

"உங்க ஆதங்கம் புரியுது சார். சில லீகல் போஃர்மாலிட்டீஸ முடிச்சு பரந்தாமனைக் காப்பாற்ற என்னாலான எல்லா முயற்சிகளும் செய்யறேன். நீங்க உங்க சைடில செய்ய வேண்டியத புரொசிட் பண்ணுங்க." என்று சொன்ன இன்ஸ்பெக்டர் ஒரு கான்ஸ்டபிளை அழைத்துச் சொன்னார்.

"இவர் கூடப்போய் பரந்தாமனை அழைச்சுக் கொண்டு வாங்க".

பழனிமலை கைகூப்பி விடைபெற்றுக் கொண்டார். ஆனந்தும் கைகுலுக்கி விடை பெற்றான்.

மறுநாள் காலை, காவ்யாவும் பெண்களும் ஹாஸ்டலுக்கு திரும்புவதற்கு தயாராகிக் கொண்டிருந்தார்கள். வெளியே மாருதி ஜீப் தயாராக நின்றது. அவர்களை வழியனுப்பி வைப்பதற்காக இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணனும் வந்திருந்தார். ஒருவாறாக கேஸ் முடிவுக்கு வந்த திருப்தி முகத்தில் தெரிந்தது.

"இன்னைக்கு ராத்திரி நானும் பொறப்படறேன். டெல்லியில ஒரு இன்வெஸ்டிகேசன் அட்டெண்ட் பண்ணியாகணும் ." என்ற ஆனந்தின் தோள்களில் தட்டிக் கொடுத்தார் இன்ஸ்பெக்டர்.

ஜீப்பில் ஏறி உட்கார்ந்த காவ்யா ஓரக்கண்ணால் ஆனந்தைப் பார்த்தாள். சுந்தரமூர்த்தியும், கலையரசியும் ஒருவரை ஒருவர் அர்த்தபுஷ்டியுடன் பார்த்து சிரித்துக்கோண்டனர்.

"உங்க வீட்டுப் பெரியவங்கள அழைச்சிட்டு வாங்க ஆனந்த். முறைப்படி பேசி முடிச்சிடுவோம்".

சுந்தரமூர்த்தி சொல்ல காவ்யாவின் முகத்தில் வெட்கம் எட்டிப் பார்த்தது. தனக்கும் சம்மதம் என்பது போல பிரகாஷூம் தலையசைத்தான்.

பங்களா பழைய ஆனந்தத்திற்கு திரும்பிக் கொண்டிருந்தது.

(முற்றும்)